ஆ. க.பொ.த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் அனுமதிக்காக விண்ணப்பிப்பதற்கான ஆகக்குறைந்த தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். (பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட க.பொ.த. (உ/த) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்).

**4. உயர்கல்வி மற்றும் தொழிற்தகைமைகள்:**

**அ. சட்ட அலுவலர் (நிரந்தரம்)**

| | |
|---|---|
| பதவிநிலை | - துணைப்படைத் தலைவர் (லெப்டினன்ட்) (ஆண்/பெண்) |
| தகைமைகள் | - சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தலும், இத்துறையில் இரண்டு வருட அனுபவத்தைக் கொண்டிருத்தலும். |
| வயது | - 30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல். |

**ஆ. பாண்ட் வாத்திய தலைமை அலுவலர் (சங்கீதம்) - (நிரந்தரம்)**

| | |
|---|---|
| பதவிநிலை | - உப துணைப்படைத் தலைவர் (உப லெப்டினன்ட்) (ஆண்/பெண்) |
| தகைமைகள் | - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சங்கீதம் தொடர்பான ஆற்றுகைக் கலையில் (Performing Arts) சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து சங்கீதம் தொடர்பான நுண்கலையில் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து சங்கீதப் பாடத்தில் கலைமாணி சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல். |
| மேலதிக தகைமைகள் மற்றும் செயன்முறைப் பரீட்சை | - மேற்கத்தேய/ இந்திய சங்கீதத்துறையில் வேறெவையேனும் கற்கைநெறிகளை தொடர்ந் திருத்தல் மற்றும்<br>இத்துறையில் அடையப்பெற்ற வேறெவையேனும் அடைவுகள்.<br>தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சங்கீத நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருத்தல்/வெற்றிகளை அடைந்திருத்தல். |

இலங்கை கடற்படை பாண்ட் வாத்தியக்குழுவினால் நடாத்தப்படும் செயன்முறைப் பரீட்சையை வெற்றிகரமாக நிறைவுசெய்ததன் பின் பொருத்தமான விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அனைத்து விண்ணப்பதாரிகளும் தகைமைபெறுவதற்கான செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றுவது காட்டாயமாகும்.

வயது - 26 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

**பாண்ட் வாத்திய தலைமை அலுவலர் (சங்கீதம்) - (நிரந்தரம்)**

பதவிநிலை - பதில் துணைப்படைத் தலைவர் (பதில் லெப்டினன்ட்) (ஆண்/பெண்)

தகைமைகள் - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து சங்கீதம் தொடர்பான ஆற்றுகைக் கலையில் (Performing Arts) சிறப்புப் பட்டமொன்றை முதல் வகுப்பு சித்தியுடன் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து சங்கீதம் தொடர்பான நுண்கலையில் சிறப்புப் பட்டமொன்றை முதல் வகுப்பு சித்தியுடன் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து சங்கீதப் பாடத்தில் கலைமாணி சிறப்புப் பட்டமொன்றை முதல் வகுப்பு சித்தியுடன் பெற்றிருத்தல்.

மேலதிக தகைமைகள் மற்றும் செயன்முறைப் பரீட்சை - மேற்கத்தேய/ இந்திய சங்கீதத்துறையில் வேறெவையேனும் கற்கைநெறிகளை தொடர்ந் திருத்தல் மற்றும்
இத்துறையில் அடையப்பெற்ற வேறெவையேனும் அடைவுகள்.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சங்கீத நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருத்தல்/வெற்றிகளை அடைந்திருத்தல்.

இலங்கை கடற்படை பாண்ட் வாத்தியக்குழுவினால் நடாத்தப்படும் செயன்முறைப் பரீட்சையை வெற்றிகரமாக நிறைவுசெய்ததன் பின் பொருத்தமான விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அனைத்து விண்ணப்பதாரிகளும் தகைமைபெறுவதற்கான செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றுவது காட்டாயமாகும்.

வயது - 26 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

**பாண்ட் வாத்திய தலைமை அலுவலர்(நடனம்) - (நிரந்தரம்)**

பதவிநிலை - உப துணைப்படைத் தலைவர் (உப லெப்டினன்ட்) (ஆண்/பெண்)

தகைமைகள் -இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து நடனம் தொடர்பான ஆற்றுகைக் கலையில் (Performing Arts) சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து நடனம் தொடர்பான நுண்கலையில் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து நடனப் பாடத்தில் கலைமாணி சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல்.

மேலதிக தகைமைகள் மற்றும் செயன்முறைப் பரீட்சை - மேற்கத்தைய/ இந்திய நடனத்துறையில் வேறெவையேனும் கற்கைநெறிகளை தொடர்ந்திருத்தல் மற்றும்
இத்துறையில் அடையப்பெற்ற வேறெவையேனும் அடைவுகள்.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் நடன நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருத்தல்/வெற்றிகளை அடைந்திருத்தல்.

இலங்கை கடற்படை பாண்ட் வாத்தியக்குழுவினால் நடாத்தப்படும் செயன்முறைப் பரீட்சையை வெற்றிகரமாக நிறைவுசெய்ததன் பின் பொருத்தமான விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அனைத்து விண்ணப்பதாரிகளும் தகைமைபெறுவதற்கான செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றுவது காட்டாயமாகும்.

வயது - 26 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

**பாண்ட் வாத்திய தலைமை அலுவலர் (நடனம்) - (நிரந்தரம்)**

பதவிநிலை - பதில் துணைப்படைத் தலைவர் (பதில் லெப்டினன்ட்) (ஆண்/பெண்)

தகைமைகள் - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து நடனம் தொடர்பான ஆற்றுகைக் கலையில் (Performing Arts) சிறப்புப் பட்டமொன்றை முதல் வகுப்பு சித்தியுடன் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து நடனம் தொடர்பான நுண்கலையில் சிறப்புப் பட்டமொன்றை முதல் வகுப்பு சித்தியுடன் பெற்றிருத்தல்.

அல்லது

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து நடனப் பாடத்தில் கலைமாணி சிறப்புப் பட்டமொன்றை முதல் வகுப்பு சித்தியுடன் பெற்றிருத்தல்.

மேலதிக தகைமைகள் மற்றும் செயன்முறைப் பரீட்சை - மேற்கத்தேய/ இந்திய நடனத்துறையில் வேறெவையேனும் கற்கைநெறிகளை தொடர்ந்திருத்தல் மற்றும்
இத்துறையில் அடையப்பெற்ற வேறெவையேனும் அடைவுகள்.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் நடன நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருத்தல்/வெற்றிகளை அடைந்திருத்தல்.

இலங்கை கடற்படை பாண்ட் வாத்தியக்குழுவினால் நடாத்தப்படும் செயன்முறைப் பரீட்சையை வெற்றிகரமாக நிறைவுசெய்ததன் பின் பொருத்தமான விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அனைத்து விண்ணப்பதாரிகளும் தகைமைபெறுவதற்கான செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றுவது காட்டாயமாகும்.

வயது - 26 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

இ. **பல்மருத்துவ உத்தியோகத்தர் (நிரந்தர)**
**கடற்படை கீழ்நிலை உத்தியோகத்தர் (மிட்ஷிப்மன்)**

*தகைமைகள்* - *1 ஆம், 2 ஆம், 3 ஆம் மற்றும் 4 ஆம் அரையாண்டுகளை (Semester) பூர்த்திசெய்திருத்தல் அல்லது 1 ஆவது பற்சத்திர சிகிச்சை இளமாணிப் பரீட்சையை (BDS) வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தலுடன் பற்சத்திர சிகிச்சை இளமாணிக் கற்கைநெறியை 3 ஆவது வருடத்தில் கற்றல்.*

*வயது* - *18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல்.*

**பதில் துணைப்படைத் தலைவர் (பதில் உப லெப்டினன்ட்)**

*தகைமைகள்* - *பற்சத்திர சிகிச்சை இளமாணிப் பாடநெறியை (BDS) 5 ஆம் மற்றும் 6 ஆம் அரையாண்டுகளை வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல் அல்லது இரண்டாவது பற்சத்திர சிகிச்சை பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் பற்சத்திர சிகிச்சை இளமாணிக் கற்கைநெறியை 4 ஆவது வருடத்தில் கற்றல்.*

*வயது* - *20 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல்*

**உப துணைப்படைத் தலைவர் (உப லெப்டினன்ட்)**

*தகைமைகள்* - *பற்சத்திர சிகிச்சை இளமாணிப் பாடநெறியில் (BDS) 7 ஆம் மற்றும் 8 ஆம் அரையாண்டு களை பூர்த்திசெய்திருத்தல் அல்லது பற்சத்திர சிகிச்சை இளமாணிக் கற்கைநெறியின் இறுதிப் பரீட்சையின் பகுதி 1 ஐ வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல் மற்றும் பற்சத்திர சிகிச்சை இளமாணிக் கற்கைநெறியை இறுதி வருடத்தில் கற்ற வண்ணம் இருத்தல்.*

*வயது* - *30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.*

**சத்திரசிகிச்சை துணைப்படைத் தலைவர் (லெப்டினன்ட்)**

*தகைமைகள்* - *இலங்கை மருத்துவ சபையில் (SLMC) நிரந்தர பதிவுடன்கூடிய பற்சத்திர சிகிச்சை இளமாணிப் பட்டம் (BDS) அல்லது அதற்குச் சமமான தகைமை.*

*வயது* - *35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.*

ஈ. **மின்னியல் உத்தியோகத்தர் (நிரந்தர)**

**உப துணைப்படைத் தலைவர் (உப லெப்டினன்ட்) (ஆண்/பெண்)**

*தகைமைகள்* - *பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து மின்னியல்/இலத்திரனியல்/தொலைத்தொடர்பு/இயந்திர மின்னணுவியல் துறைகளில் நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட பொறியியல் பட்டம்.*

*வயது* - *30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.*

**துணைப்படைத் தலைவர் (லெப்டினன்ட்) (ஆண்/பெண்)**

*தகைமைகள்* - *பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து மின்னியல்/இலத்திரனியல்/தொலைத்தொடர்பு/இயந்திர மின்னணுவியல் துறையில் நான்கு வருட பொறியில் பட்டத்துடன் இலங்கைப் பொறியியல் பேரவையில் (ECSL) இணைப் பொறியியலாளராக பதிவுசெய்திருத்தல்.*

*வயது* - *32 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.*

உ. **தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (நிரந்தர)**

பதவிநிலை - லெப்டினன்ட் (ஆண்)

தகைமைகள் - அரச பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கணினி விஞ்ஞானம் பற்றிய பொறியியல் பட்டம் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பு பட்டம் அல்லது விஞ்ஞானமாணி பொறியியல் பட்டம்.

கடற்படைத் தளபதி திருப்தி அடையும் வகையில், மென்பொறியியலாளர் அல்லது வன்பொறியியலாளர் அல்லது தரவுத்தள நிர்வாகி அல்லது வலையமைப்பு நிர்வாகி அல்லது தகவல் தொழில்நுட்ப விரிவுரையாளர் அல்லது ஏதேனும் தகவல் தொழில்நுட்ப துறையில் ஆகக் குறைந்தது 12 மாத தொழில் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

தரவு அறிவியல், செயற்கை நுண்ணறிவு, இணையவெளி பாதுகாப்பு மற்றும் பொருட்களின் இணையம் (Internet of Things – IOT) என்பவற்றில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

வயது - 32 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

ஊ. **நிறைவேற்று உத்தியோகத்தர் (தொண்டர்)**

பதவிநிலை - பதில் உப துணைப்படைத் தலைவர் (பதில் லெப்டினன்ட்) (ஆண்/பெண்)

தகைமைகள் - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பொதுப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

வயது - 28 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

எ. **கணக்கீட்டு உத்தியோகத்தர் (தொண்டர்)**

பதவிநிலை - பதில் உப துணைப்படைத் தலைவர் (பதில் உப லெப்டினன்ட்) (ஆண்/பெண்)

தகைமைகள் - இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து முகாமைத்துவப் பட்டமொன்றை அல்லது வணிகமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

வயது - 28 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

ஏ. **விவசாய உத்தியோகத்தர் (தொண்டர்)**

பதவிநிலை - பதில் உப துணைப்படைத் தலைவர் (பதில் உப லெப்டினன்ட்) (ஆண்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து விவசாயத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல்.

வயது - 28 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

ஐ. **ஆங்கில மொழி போதனாசிரியர் (தொண்டர்)**

பதவிநிலை - துணைப்படைத் தலைவர் (லெப்டினன்ட்) (ஆண்/பெண்)

தகைமைகள் - ஆங்கில மொழிப் பட்டத்துடன் ஆங்கில மொழி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பட்டத்தைப் பெற்றிருத்தல்.

ஆங்கில மொழி கற்பித்தலில் 03 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

வயது - 35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

**ஆங்கில மொழி போதனாசிரியர் (தொண்டர்)**

| | |
|---|---|
| பதவிநிலை | - உப துணைப்படைத் தலைவர் (உப லெப்டினன்ட்) (ஆண்/பெண்) |
| தகைமைகள் | - அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பான பயிற்சிச் சான்றிதழுடன் 03 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல். |
| வயது | - 35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல். |

**ஆங்கில மொழி போதனாசிரியர் (தொண்டர்)**

| | |
|---|---|
| பதவிநிலை | - உப துணைப்படைத் தலைவர் (உப லெப்டினன்ட்) (ஆண்/பெண்) |
| தகைமைகள் | - ஆங்கில மொழி மற்றும் இலக்கியம் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டமொன்றைப் பெற்றிருத்தலும் 03 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தலும். |
| வயது | - 35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல். |

5. **ஏனைய தகைமைகள்**

இலங்கை தொண்டர் கடற்படைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பின்வரும் பொது நிபந்தனைகளை விண்ணப்பதாரிகள் கட்டாயம் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| அ. தேசிய இனம் | - இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். | | |
| ஆ. வயது | - விண்ணப்ப முடிவுத் திகதியில் பொருத்தமான பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய வயதினைக் கொண்டிருத்தல் வேண்டும். | | |
| இ. உயரம் | - ஆண் | - 65 அங்குலங்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும். | |
| | - பெண் | - 63 அங்குலங்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும. | |
| ஈ. நிறை | - ஆண் | - 52 கிலோகிராம்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும். | |
| | - பெண் | - 41 கிலோகிராம்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும. | |
| உ. மார்பு | - ஆண் | - 32 அங்குலங்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும. | |
| ஊ. பார்வை நிறம் | - எஸ்ரிஇ II (உரிய பார்வை) | | |
| எ. பார்வைத் திறன் | - இடக் கண்ணில் 6/6 மற்றும் வலக் கண்ணில் 6/6 (மூக்குக்கண்ணாடி மற்றும் தொடர்பு வில்லைகள் இன்றி) | | |
| ஏ. சிவில் அந்தஸ்து | - திருமணமானவர்/திருமணமாகாதவர் | | |

6. விளையாட்டுத் துறையில் காட்டிய சிறந்த சாதனைகள் மீது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்பதுடன், ஏற்கனவே அரச/தனியார் துறையில் தொழிலில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் மீது விசேட முன்னுரிமை வழங்கப்படும்.

7. மேலே 2 ஆம், 3 ஆம் பந்திகளில் காட்டப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் போது உயரம், வயது, கண் பார்வை மற்றும் நிறை என்பன பரீட்சிக்கப்படும். வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட அளவுகளுக்கு அமைய உயரம், வயது, கண் பார்வை மற்றும் நிறை என்பன காணப்படாத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு முன்வைக்கப்பட மாட்டார்கள். எவரேனும் விண்ணப்பதாரியொருவரின் உயரம், வயது என்பன வேண்டப்பட்டவாறு இல்லாதிருப்பினும், அவ்விண்ணப்பதாரி கடற்படைச் சேவைக்குப் பயனுள்ள விசேட திறனொன்றை அல்லது தகுதியைக் கொண்டிருப்பாராயின், சேவைக்கான தேவையின் அடிப்படையில் கடற்படைத் தளபதியின் தற்றுணிபின் அடிப்படையில் அவ்விண்ணப்பதாரி கருத்திற்கொள்ளப்படுவார்.

8. **சேவை நிபந்தனைகள்**

அ. விண்ணப்பதாரிகள் இலங்கை தொண்டர் கடற்படை ஆண்/பெண் உத்தியோகத்தர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள் என்பதுடன், அவர்கள் அடிப்படை பயிற்சி நெறிகளைப் பின்பற்றுதல் வேண்டும். ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற அந்தந்த பிரிவின் அடிப்படையில் பயிற்சிப் பாடநெறிக் காலப்பகுதி வேறுபடும்.

ஆ. இலங்கை கடற்படை தளபதியின் தீர்மானத்திற்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற ஆண்/பெண் உத்தியோகத்தர்கள் இலங்கையின் எப்பாகத்திலேனும் அல்லது வெளிநாட்டில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

இ. எல்லா உத்தியோகத்தர்களும் கடமை நிமித்தம் அல்லது பயிற்சிக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உலகின் எந்தவொரு நாட்டிற்கும் இணைக்கப்படுவதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

ஈ. பயிற்சிக் காலத்தின்போதும், அதன் பின்னரும் எல்லா ஆண்/பெண் உத்தியோகத்தர்களும் இலங்கை கடற்படைச் சட்டத்திற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

உ. பயிற்சிக் காலப்பகுதியில் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு தமது அபேட்சகத்துவத்தை சுயவிருப்பின் பேரில் இடைநிறுத்திக்கொள்வதற்குத் தேவைப்படின், அவ் உத்தியோகத்தர் சார்பில் இலங்கை அரசாங்கத்தினால் அதுவரை ஏற்க நேரிட்ட அனைத்துச் செலவுகளையும் அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

ஊ. பயிற்சிக் காலப்பகுதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் ஆண்/பெண் உத்தியோகத்தரொருவரின் தவறான நடத்தை காரணமாக அல்லது அவர் பொறுப்புக்கூற வேண்டிய ஏதேனும் காரணி காரணமாக அதிகார ஆணை வழங்கப்படுவதற்கு அவர் தகைமையற்றவர் என அதிகாரிகளினால் தீர்மானிக்கப்பட்டால், அவ் உத்தியோகத்தர் சார்பில் அதுவரை ஏற்க நேரிட்ட அனைத்துச் செலவுகளையும் அச்சந்தர்ப்பத்திலேயே இலங்கை அரசுக்குத் திருப்பிச் செலுத்துவதற்கு இணங்குவதாக, இலங்கை அரசின் பிரதிநிதி என்ற வகையில் இலங்கை கடற்படைத் தளபதியுடன் உடன்படிக்கையொன்றிற்கும், பிணைமுறியொன்றிற்கும் கைச்சாத்திடுதல் வேண்டும்.

எ. பயிற்சிக் காலப்பகுதியில் ஆண்/பெண் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை கடற்படை இல்லங்களிலிருந்து தங்குமிட வசதிகளும், உணவும் வழங்கப்படும்.

ஏ. வெற்றிடமாகவுள்ள திருமணமானவர்களுக்கான இல்லங்களை அடிப்படையாகக் கொண்டு திருமணமான ஆண்/பெண் உத்தியோகத்தர்களுக்கு இல்லங்கள் வழங்கப்படும். இதற்கான இல்ல வாடகை அரச ஊழியர்களுக்கு ஏற்புடையவாறு அறவிடப்படும்.

9. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் பிரகாரம் மொழிக் கொள்கையை அமுல் செய்யும் பொருட்டு ஆக்கப்பட்டுள்ள மற்றும் இதனகத்துப் பின்னர் ஆக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகள் மற்றும் உறுப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

10. **சம்பளம் மற்றும் படிகள்**.- 2020.01.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டுள்ள 03/2016 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

| விபரம் | கடற்படையிலுள்ள கீழ்நிலை உத்தியோகத்தர் (MIDSHIPMEN) (ரூ.) | பதில் உப துணைப்படைத் தலைவர் (பதில் உப லெப்டினன்ட்) (ரூ.) | உப துணைப்படைத் தலைவர் (உப லெப்டினன்ட்) (ரூ.) | துணைப்படைத் தலைவர் (லெப்டினன்ட்) (ரூ.) | துணைப்படைத் தளபதி (லெப்டினன்ட் கொமாண்டர்) (ரூ.) |
|---|---|---|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 32,750.00 | 41,905.00 | 47,615.00 | 55,625.00 | 60,965.00 |
| வாழ்க்கைச் செலவுப் படி | 7,800.00 | 7,800.00 | 7,800.00 | 7,800.00 | 7,800.00 |
| சீருடைப் படி | 525.00 | 525.00 | 525.00 | 525.00 | 525.00 |
| கடின சேவைப் படி | - | 600.00 | 600.00 | 600.00 | 600.00 |
| மேலதிக படி | 1,000.00 | 1,000.00 | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| விசேட சீராக்கல் படி | 3,000.00 | 3,000.00 | 3,000.00 | 3,000.00 | 3,000.00 |
| **மொத்தம்** | **45,075.00** | **54,830.00** | **60,540.00** | **68,550.00** | **73,890.00** |

அ. பங்கீட்டுப் பணப்படியானது உணவு அளிக்கப்படாத உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்கப்படும்.

ஆ. தகைமைச் சம்பளம், ஏற்புடையவிடத்து, மாதாந்தம் ஆகக் கூடியது ரூ. 637.50 செலுத்தப்படும்.

இ. வருடமொன்றிற்கு மூன்று சோடி விடுமுறைப் புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கப்படும். (உத்தியோகத்தர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் ஏற்புடையவிடத்து தங்கிவாழ்வோர் ஆகியோருக்காக).

ஈ. முகாமில் தங்கியிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு மாதத்தில் ஒரு தடவை வீட்டிற்கு செல்வதற்கும், சென்று வருவதற்கும் ஒரு சோடி கடமை நிமித்தமான புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கப்படும் அல்லது பேரூந்துக் கட்டணம் செலுத்தப்படும்.

உ. சீருடை மற்றும் அதனுடன் இணைந்த துணைப்பொருட்கள் இலவசமாக வழங்கப்படும்.

ஊ. மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும். (உத்தியோகத்தர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் ஏற்புடையதாயின் தங்கிவாழ்வோர் ஆகியோருக்காக).

எ. அரசாங்க திருமணமானவர்களுக்கான இல்லமொன்றில் தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொள்ளாத திருமணமான ஆண்/பெண் உத்தியோகத்தர்கள் ரூ. 3,200.00 தொடக்கம் ரூ. 7,700.00 வரையான வீட்டு வாடகைப் படிக்கு உரித்துடையவர்களாவர்.

11. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்.**-

அ. விண்ணப்பங்கள் கீழ்க் காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் விபரங்கள் தெளிவாகப் பூர்த்திசெய்யப்படுதலும் வேண்டும். முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை, 2023, செத்தெம்பர் 18 ஆந் திகதி நண்பகல் 12 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), இலங்கை கடற்படை தலைமையகம், த.பெ. எண் 593, கொழும்பு 01" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பம் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "நேரடி நுழைவு- நிரந்தர/ தொண்டர் ஆண்/பெண் உத்தியோகத்தர்கள்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும், பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் அதேவகையில் நிகழ்நிலை முறைமை (Online) ஊடாகவும் விண்ணப்பிக்கப்படல் வேண்டும். மேற்சொன்ன இரு வழிகளிலும் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள், பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத விண்ணப்பங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு www.navy.lk எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும் அல்லது 011-7195118 / 011-7195120 /011-7195154 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

ஆ. அரசாங்க சேவையிலுள்ள (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், சிவில் நிறுவனங்கள்) விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள், விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்பட்டால் விடுவிக்கப்படுவார் எனும் அத்தாட்சிப்படுத்தல் சகிதம் நிறுவனத்தலைவர் ஊடாக (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், சிவில் நிறுவனங்கள்) சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இ. விண்ணப்பதாரிகள், நேர்முகப்பரீட்சையின்போது அல்லது வேறேதேனும் சந்தர்ப்பத்தில் கீழ்க் காட்டப்பட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பங்களை அனுப்பும்போது அவ் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளை இணைத்து அனுப்புதலும் வேண்டும்.

(1) பிறப்புப் பதிவுச்சான்றிதழ்.

(2) விண்ணப்பித்த பிரிவிற்காக தேவைப்படுத்தப்பட்ட கல்வி/ உயர்கல்வி/ தொழிற்கல்வி/ பட்டத்தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்.

(3) பாடசாலையிலிருந்து பெற்றுக்கொண்ட பாடசாலை விடுகைப்பத்திரம் மற்றும் குணநலச்சான்றிதழ்.

(4) ஆறு மாத காலத்திற்குள் பெற்றுக்கொண்ட கிராம அலுவலரின் சான்றிதழ்.

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக்கொண்ட தொழில்/ தொழில்நுட்ப அனுபவச் சான்றிதழ் (ஏதாவது இருப்பின்).

(6) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு குணநலச்சான்றிதழ்கள் (இரண்டு வருடங்களுக்கு மேல் விண்ணப்பதாரியை நன்கு அறிந்து வைத்திருக்கும் பொறுப்புவாய்ந்த நபரொருவரிடமிருந்து அல்லது தற்போதைய தொழில்தருநரிடமிருந்து).

(7) விளையாட்டுத்துறைசார் செயற்பாடுகள் மற்றும் ஏனைய தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்

ஈ. கோரப்படும்போது மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

உ. வேறு ஆவணங்களோ அல்லது ஆவணங்களின் மூலப்பிரதிகளோ விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் ஆகாது.

ஊ. விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை அனுப்பிவைத்து அவை காணாமல் போகுமாயின், இலங்கை கடற்படை பொறுப்பேற்காது.

12. விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள ஏதேனும் கூற்று பொய்யானதென கண்டறியப்பட்டால், அப் பொய்யான கூற்று தெரிவிற்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரி தகைமையிழப்பிற்கு ஆளாவார். தெரிவின் பின் தெரியவரும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரி தண்டனையுடன் பதவி நீக்கத்திற்கு ஆளாவார்.

**13. தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள்**

அ. மேற்குறிப்பிடப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் இலங்கை கடற்படையால் நடாத்தப்படும் ஆரம்ப மருத்துவ பரிசோதனையில் சித்தியெய்துதல் வேண்டும். அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மட்டும் கீழ்க் காட்டப்பட்ட உடற் தகைமை பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

ஆ. உடற் தகைமை பரிசோதனையில் சித்தியெய்துவதற்கான தேவைப்பாடுகள்

| வயதுப் பிரிவு (வருடங்கள்) | பால்நிலை | மேல் தள்ளல் (Push ups) (2 நிமிடங்களுக்குள்) | சுழல் தள்ளல் (curl ups) (2 நிமிடங்களுக்குள்) | 1600 மீட்டர் ஓட்டம் (நிமிடங்கள்) |
|---|---|---|---|---|
| 18 - 24 | ஆண் | 27 | 25 | 11 |
| | பெண் | 11 | 19 | 12 |
| 25 - 29 | ஆண் | 24 | 23 | 13 |
| | பெண் | 9 | 17 | 15 |
| 30 - 34 | ஆண் | 20 | 21 | 15 |
| | பெண் | 8 | 15 | 17 |
| 35 - 39 | ஆண் | 18 | 19 | 16 |
| | பெண் | 7 | 13 | 18 |

இ. உடற் தகைமை பரிசோதனையில் சித்தியெய்தும் விண்ணப்பதாரிகள் மட்டும் இரண்டாவது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இரண்டாவது நேர்முகப் பரீட்சையில் சித்தியெய்தும் விண்ணப்பதாரிகள் இலங்கை கடற்படை வைத்தியசாலை மூலம் நடாத்தப்படுகின்ற முழுமையான மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். முழுமையான மருத்துவ பரிசோதனையில் சித்தியெய்தும் விண்ணப்பதாரிகள் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். உரிய பிரிவுகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் மட்டும் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய தெரிவுசெய்யப்படுவர்.

ஈ. ஆட்சேர்ப்பிற்குத் தகைமை பெறாத விண்ணப்பதாரிகளுக்கு அது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

உ. நேர்முகப்பரீட்சைக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு, நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பன பற்றி வட்ஸ்அப் செயலி (WhatsApp) ஊடாக மட்டுமே அறிவிக்கப்படும் என்பதுடன், எழுத்துமூலமான தகவல்கள் எதுவும் தபால் மூலம் அறிவிக்கப்படமாட்டாது. நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவது தொடர்பாக பிரயாணச் செலவுகளோ அல்லது வேறு படிகளோ செலுத்தப்படமாட்டாது.

ஊ. இறுதி நேர்முகப் பரீட்சையில் தகுதிபெறும் விண்ணப்பதாரிகள் இலங்கை கடற்படை மருத்துவ சபை முன் சமுகமளித்தல் வேண்டும்.

எ. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தனது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏ. விண்ணப்பதாரியொருவரை பரிந்துரை செய்ய விரும்பும் எவரும் அவருக்கு நற்சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். விண்ணப்பதாரியொருவரைத் தெரிவுசெய்வதில் எந்தவொரு வடிவிலான வலியுறுத்தல் அல்லது செல்வாக்கு செலுத்த முயற்சித்தல் என்பவை அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையிழக்கச் செய்யும்.

ஐ. விண்ணப்பதாரிகளினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கல்வி மற்றும் தொழிற்தகைமை சான்றிதழ்களின் செல்லுபடித்தன்மை பரீட்சைகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் உறுதிசெய்யப்படும்.

ஒ. எல்லா விண்ணப்பதாரிகளினதும் பாதுகாப்பு இசைவு அறிக்கைகள் (Reports on security clearance) கடற்படைத் தலைமையகத்தினால் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

**குறிப்பு**: இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுகின்றது. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

யூவீஎம்பி பெரேரா, ஆர்எஸ்பீ, யூஎஸ்பி, என்டீயூ, பிஎஸ்சீ,
துணை அட்மிரால்,
இலங்கை கடற்படைத் தளபதி.

இலங்கை கடற்படைத் தலைமையகம்,
த.பெ. எண் 593,
கொழும்பு 01.

**இலங்கை கடற்படை - நிரந்தர/தொண்டர் கடற்படையில் ஆண்/பெண் நேரடி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. தேசிய இனம் :..........................................................................
(பரம்பரை மூலமா அல்லது பதிவின் மூலமா இலங்கைப் பிரசை என்பதைக் குறிப்பிடவும். பதிவின் மூலமாயின் பதிவுச் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்)
2. விண்ணப்பிக்கும் பிரிவு/பதவி :..........................................................................
3. முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டையில் உள்ளவாறு) :..........................................................................
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :..........................................................................
5. நிரந்தர முகவரி :..........................................................................
6. தபால் முகவரி :..........................................................................
7. மின்னஞ்சல் முகவரி :..........................................................................
8. பிறந்த திகதி :..........................................................................
9. வயது: வருடங்கள் :.............................. மாதங்கள் : ......................... நாட்கள் :..................... (2023............ ஆம் திகதிக்கு)
10. உயரம் :............... (அங்குலம்) மார்பு: ............................. (அங்குலம்) நிறை :................. (கிலோகிராம்)
11. நிரந்தர வதிவிடத்திற்கு உரிய பொலிஸ்நிலையம் :..........................................................................
12. மாவட்டம் :..........................................................................
13. தேர்தல் தொகுதி :..........................................................................
14. கிராம அலுவலர் பிரிவு :..........................................................................
15. தொலைபேசி இலக்கம் (WhatsApp) :..........................................................................
16. சிவில் அந்தஸ்து :..........................................................................

17. பால்நிலை :..........................................................................................................................................................

18. கல்விகற்ற பாடசாலைகள் :..........................................................................................................................

19. பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலையின்/ பல்கலைக்கழகத்தின் பெயர் | சித்தியெய்திய பரீட்சை | பரீட்சைக்குத் தோற்றிய வருடம் | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>ஏனைய | | |

20. பாடசாலை அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பின்னர் செய்த தொழில் பற்றிய விபரங்கள் (ஏற்புடையதாயின்):

| தொழில்தருநரின் பெயர் மற்றும் முகவரி | தொழிலின் தன்மை | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

21. பெற்றோர் பற்றிய விபரங்கள்:

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை<br>தாய் | | | |

22. பதவிக்கான ஏதேனும் விசேட தகைமைகள் :..........................................................................................................

23. விளையாட்டுகளில் படைத்த சாதனைகள் பற்றிய விபரங்கள் (பங்குபற்றிய போட்டிகள் மற்றும் விளையாட்டுக் குழுக்கள், திகதி மற்றும் படைத்த சாதனைகளுடன் தருக)

24. பாடசாலையில் அல்லது பல்கலைக்கழகத்தில் அல்லது வெளிவாரியான நிறுவனங்களில் காட்டிய பிற சாதனைகள் (திகதி, ஆண்டு முதலியவற்றுடன் விபரங்களைத் தரவும்) :.....................................................................................

25. ஆயுதப்படை, தொண்டர்படை, பயிலிளவல் படை அல்லது ஆண் சாரணர் அமைப்பில் ஆற்றிய ஏதேனும் முன்னரான சேவை :...............................................................................

26. இலங்கை கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதப்படைச் சேவைகளில் அல்லது பொலிஸ் படையில் இணைவதற்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்துள்ளீர்களா? அவ்வாறெனின், அவை பற்றிய விபரங்களையும் பெறுபேறுகளையும் குறிப்பிடவும் :..........................................................................................................................................................

27. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு அல்லது இடைநிறுத்தப்பட்ட தண்டனைத் தீர்ப்பொன்றைப் பெற்றுள்ளீரா? அவ்வாறெனின், விபரங்களைத் தரவும் :...........................................................................

28. அரச திணைக்களமொன்றில், சபையொன்றில், கூட்டுத்தாபனமொன்றில், பகிரங்கச்சேவை தாபனமொன்றில் (மத்திய வங்கி/அரச வங்கிகள்/பல்கலைக்கழகங்கள்/சிவில் அமைப்புக்கள்/ அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் கம்பனிகள் அடங்கலாக) நீங்கள் சேவையாற்றியுள்ளீரா? அவ்வாறெனின், தொழில் முடிவுறுத்தப்பட்டமைக்கான காரணங்களையும் விபரங்களையும் குறிப்பிடுக :..........................................................................................................................................

29. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள்:

| பெயர் | பதவி | தபால் முகவரி |
|---|---|---|
| | | |

30. விண்ணப்பதாரியினால் கைச்சாத்திடப்பட வேண்டிய வெளிப்படுத்தல்:

மேலே என்னால் கூறப்பட்ட விடயங்கள் உண்மையானவையும் சரியானவையும் என எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில் வெளிப்படுத்துகின்றேன். இலங்கை அரசாங்கத்தின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கடற்படையில் உள்ள அதிகார ஆணைக்குழுவிற்காக தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பாக கடைபிடிக்கப்படும் நடவடிக்கைமுறையையும் பிரயோகிக்கப்படும் ஒழுங்குவிதிகளையும் நான் நன்கு வாசித்து புரிந்துகொண்டேன்.

.................... ......................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

08-1213

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – அம்பாந்தோட்டை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடத்துக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 08.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை | பந்தகிரிய பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அம்பாந்தோட்டை. |

08-1218

---

## இலங்கை வான்படை நேரடி நுளைவு

அரசாணையமர்வு அலுவலர் வெற்றிடங்கள்

1. இலங்கை நிரந்தர / தொண்டர் வான்படையில் ஆண் / பெண் நேரடி நுளைவு அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் கீழ்க்காணும் பிரிவுகளில் காணப்படுகின்றன.

அ. வானூர்தி மற்றும் பொது பொறியியல் (ஆண்)
ஆ. மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் (ஆண்/பெண்)
இ. தகவல் தொழில்நுட்ப பொறியியல் (ஆண்)
ஈ. சிவில் பொறியியல் (ஆண்/பெண்)
உ. வைத்திய (ஆண்/பெண்)
ஊ. பல்வைத்திய (ஆண்/பெண்)
எ. நீதி (ஆண்/பெண்)
ஏ. கால்நடை வைத்திய (ஆண்/பெண்)
ஐ. கலை நிகழ்ச்சி (ஆண்)
ஒ. கல்வி (ஆண்/பெண்)
ஓ. கணக்காளர் (ஆண்/பெண்)

2. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

3. தொழிற்துறை தகைமை /கல்வித்தகைமை

(அ) **வானூர்தி மற்றும் பொது பொறியியல் பிரிவு**

(1) ஆராய்ச்சி பொறியியல் அதிகாரி (சீருடை வகை) பொருள்/ மின் பொறியியலாளர் - ஆண் (நிரந்தர) மெட்டீரியல்/எலக்ட்ரிக்கல் பொறியியலில் இளங்கலை அல்லது முதுகலை பட்டம் (இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பட்டப்படிப்புகளில் விருது பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) அல்லது அது போன்ற தகைமை பெற்றிருக்க வேண்டும்.

பட்டயப் பொறியியல் அல்லது IESL நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல் கூடுதல் நன்மையாக இருக்கும். பூர்த்தி செய்யப்பட்ட பயிற்சி அல்லது கூடுதல் படிப்புகள் மற்றும் சம்பந்தப்பட்ட துறையில் பணி அனுபவங்கள் சாதகமாக இருக்கும்/ UAV அமைப்புகளுடன் தொடர்புடைய வலுவான கணிதம், பகுப்பாய்வு மற்றும் ஆக்கபூர்வமான சிந்தனை திறன்கள் (Data link, autopilot systems and firmware Development, Electro-Mechanical Systems, flight controls and stability) / ஆராய்ச்சியாளர்கள் / தன்னாட்சி அமைப்புகளுடன் (Autonomous Systems & தொடர்பான வெளியீடுகள்/ வாகனங்கள் தொடர்பான ஆய்வுகள்/ Vehicles, Machine Learning (Python, C, etc.), etc. மற்றும் தொடர்புடைய மென்பொருள் கையாளுதல் (SOLID WORK, CAD, MATLAB) மதிப்பு கூட்டல் (IEEE வெளியீடுகளுக்கான தீவிரம்) மற்றும் வலுவான தகவல் தொடர்பு திறன் மற்றும் குழுப்பணி (ஆராய்ச்சி தொடர்பான அனுபவம்) என கருதப்படும். UAV மற்றும் ட்ரோன்கள் கையாளுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

ஆராய்ச்சி திட்டங்களில் முந்தைய அனுபவம் கூடுதல் நன்மையாக கருதப்படும்.

(2) ஆராய்ச்சி பொறியியல் அதிகாரி (சீருடை அல்லாத வகை) வானூர்தி/ பொருள் / இயந்திரவியல் / மெகாரானிக்ஸ்/மின் பொறியியல்- ஆண் (தொண்டர்)

Aerospace/ Aeronautical/ Material/ Mechanical/Mechatronics/ Electrical Engineering ஆகியவற்றில் இளங்கலை அல்லது முதுகலை பட்டம் அல்லது அது போன்ற திறன் பெற்றிருக்க வேண்டும். (இலங்கை அரசாங்க பல்கலைக்கழகங்களில் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பட்டப்படிப்புகளில் விருது பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

பட்டயப் பொறியியல் அல்லது IESL நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல் கூடுதல் நன்மையாக இருக்கும். பூர்த்தி செய்யப்பட்ட பயிற்சி அல்லது கூடுதல் படிப்புகள் மற்றும் சம்பந்தப்பட்ட துறையில் பணி அனுபவங்கள் சாதகமாக இருக்கும்/ UAV அமைப்புகளுடன் தொடர்புடைய வலுவான கணிதம், பகுப்பாய்வு மற்றும் ஆக்கபூர்வமான சிந்தனை திறன்கள் (Data link, autopilot systems and firmware Development, Electro-Mechanical Systems, flight controls and stability) /ஆராய்ச்சியாளர்கள் /தன்னாட்சி அமைப்புகளுடன் ( Autonomous Systems) தொடர்பான வெளியீடுகள் /வாகனங்கள் தொடர்பான ஆய்வுகள்/வெளியீடுகள் இயந்திர கற்றல் (Python, C, etc.), etc. மற்றும் தொடர்புடைய மென்பொருள் கையாளுதல் (SOLID WORK, CAD, MATLAB) மதிப்பு கூட்டல் (IEEE வெளியீடுகளுக்கான தீவிரம்) மற்றும் வலுவான தகவல் தொடர்பு திறன் மற்றும் குழுப்பணி (ஆராய்ச்சி தொடர்பான அனுபவம்) என கருதப்படும். UAV மற்றும் ட்ரோன்களில் முன்னுரிமை வழங்கப்படும்.)

ஆராய்ச்சி திட்டங்களில் முந்தைய சேவை அனுபவம் கூடுதல் நன்மையாக கருதப்படும்.

(ஆ) **மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் பிரிவு**

(1) **(ஆராய்ச்சி அலுவலர்)- ஆண் /பெண் (தொண்டர்)**

முதுநிலை நிலை தகுதி வாய்ந்த வல்லுநர்கள் : பின்வரும் துறைகளில் முதுகலை பட்டம் முடித்திருத்தல் வேண்டும் அல்லது பின்வரும் துறைகளில் குறைந்த பட்சம் ஒரு (01) வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அ. மின் /மின்னணுவியல் மற்றும் தொலைத்தெடர்பு பொறியியல்
ஆ. இரசாயனம் /உயிரியல் பொறியியல்
இ. தொலை உணர்வு (Remote sensing)
ஈ. மெக்கானிக்கல் மற்றும் மெக்கட்ராணிக்ஸ் பொறியியல்
உ. இணைய பாதுகாப்பு/நெட்வேர்க் பொறியியலாளர்
ஊ. நனோ தொழில்நுட்பம்
எ. தொழில்நுட்ப கருவிகள்

பட்டியலிடப்பட்ட அதிகாரி முக்கியமாக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளின் கடமைகளில் வைக்கப்படுவர்.

(2) **இலத்திரனியல் தகவல் தொழில்நுட்ப பொறியியல் அதிகாரி - ஆண் (நிரந்தர)**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் பெறப்பட்ட இலத்திரனியல் மற்றும் தொலைதொடர்பு பொறியியல் BSc பட்டம் அல்லது மொரட்டுவ பல்கலைகழகத்தில் பெற்ற இலத்திரனியல் /மின்னியல் தொலைதொடர்பு பிரதான பாடமாக BSc பௌதிக விஞ்ஞான பட்டத்துடன் இருத்தல் வேண்டும். இலத்திரனியல் /மின்னியல் தொலைத்தொடர்பு (NDT) தேசிய தொழில்நுட்பவியலில் டிப்ளோமா இருத்தல் வேண்டும். மொரட்டுவ பல்கலைகழகத்தில் அல்லது இலங்கை உயர் தேசிய பொறியியல் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட டிப்ளோமா (HNDE) அல்லது இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (NDES) இருத்தல் வேண்டும். IESL நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும். குறிப்பிட்ட துறையில் 01 வருட கால சேவை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(3) **ஆராய்ச்சி பொறியியலாளர் - (சீருடை அல்லாத வகை) இலத்திரனியல் /இயந்திரவியல் பொறியியல் அதிகாரி - ஆண் (தொண்டர்)**
இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர் அல்லது இயந்திரவியல் பொறியியலில் இளங்கலை அல்லது முதுகலை பட்டம் அல்லது அது போன்ற தகைமை பெற்றிருக்க வேண்டும். (இலங்கை அரசாங்க பல்கலைக்கழகங்களில் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பட்டப்படிப்புகளில் விருது பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்). பட்டயப் பொறியியல் அல்லது IESL நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல் கூடுதல் நன்மையாக இருக்கும். பூர்த்தி செய்யப்பட்ட பயிற்சி அல்லது கூடுதல் படிப்புகள் மற்றும் சம்பந்தப் பட்ட துறையில் பணி அனுபவங்கள் சாதகமாக இருக்கும் / UAV அமைப்புகளுடன் தொடர்புடைய வலுவான கணிதம், பகுப்பாய்வு மற்றும் ஆக்கபூர்வமான சிந்தனை திறன்கள் (Data link, autopilot systems and firmware Development, Electro- Mechanical Systems, flight controls and stability) / ஆராய்ச்சியாளர்கள் /தன்னாட்சி அமைப்புகளுடன் (Autonomous Systems) தொடர்பான வெளியீடுகள்/ வாகனங்கள் தொடர்பான ஆய்வுகள்/ Vehicles, Machine Learning (Python, C, etc.), etc. மற்றும் தொடர்புடைய மென்பொருள் கையாளுதல் (SOLID WORK, CAD, MATLAB) மதிப்பு கூட்டல் (IEEE வெளியீடுகளுக்கான தீவிரம்) மற்றும் வலுவான தகவல் தொடர்பு திறன் மற்றும் குழுப்பணி/ ஆராய்ச்சி தொடர்பான அனுபவம் எனக் கருதப்படும். UAV மற்றும் ட்ரோன்களில் முன்னுரிமை வழங்கப்படும். சம்பந்தப்பட்ட துறையில் 02 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

(இ) **தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு**

(1) **வலையமைப்பு பொறியியலாளர் - ஆண் (நிரந்தர)**
கணினி அல்லது தொழில்நுட்ப பொறியியல் பிரிவில் பட்டம் இருத்தல் வேண்டும் அல்லது தகவல் தொழில்நுட்பப் பிரிவில் பட்டம் இருத்தல் வேண்டும். அல்லது கணினி விஞ்ஞானத்தில் பட்டம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பிரதான பாடமாகவும் பௌதிக விஞ்ஞானத்தில் பட்டம் இருத்தல் வேண்டும். (HNDIT) உயர் தகவல் தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா. IESL நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல். British Computer நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல். அல்லது Australian Computer நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல். அல்லது சமனான தகைமை இருத்தல் வேண்டும். தகவல் தொழில்நுட்பத்தில் அல்லது data networks or server systems அனுபவம் குறிப்பிட்ட துறையில் அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

(2) **மென்பொருள் பொறியியலாளர் - ஆண் (நிரந்தர)**

கணினி அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பிரிவில் பொறியியல் பட்டம் அல்லது கணினி அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பிரிவில் பட்டம் அல்லது கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் ஒரு முக்கியான பாடமாக பௌதீக விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றிருத்தல் (HNDIT) உயர் தகவல் தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா அல்லது IESL நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல் அல்லது British Computer நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல் அல்லது Australian Computer நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல் அல்லது சமனான தகைமை மற்றும் சேவை அனுபவம் இருத்தல் அல்லது Australian Computer நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல். அல்லது சமனான தகைமை இருத்தல் வேண்டும். Java, C# or C/C++, enterprise technologies (such as Web services, APIs, XML, JSON, SSO, JMS), experience in cloud technologies and container technologies (such as AWS, Azure and Docker), micro services, enterprise integration and API management தொடர்பாக அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

(3) **தகவல்/பாதுகாப்பு விசேட நிபுணர் -**
ஆண் (நிரந்தர) கணினி பொறியியல் பிரிவில் பட்டம் இருத்தல் வேண்டும் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் பட்டம் இருத்தல் வேண்டும். அல்லது கணினி தொடர்பான பிரிவில் பட்டம் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் பட்டம் இருத்தல் வேண்டும். கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தினை பிரதான பாடமாக கொண்ட இயற்பியல் அறிவியலில் பட்டம் இருத்தல் வேண்டும். (HNDIT) உயர் தகவல் தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா அல்லது IESL நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல். British Computer நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல் அல்லது Australian Computer நிலையத்தில் அங்கத்துவம் இருத்தல் அல்லது சமனான தகைமை இருப்பதுடன் experience in Information / Cyber Security அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(ஈ) **சிவில் பொறியியல் பிரிவு**

(1) **சிவில்/இயந்திரவியல் பொறியியல் அதிகாரி** - ஆண் /பெண் (நிரந்தர/தொண்டர்) சிவில்/இயந்திரவியல் பொறியியல் ஆகியவற்றில் இளங்கலை அறிவியல் பட்டம் (BSc) மற்றும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் IESL இல் இணை உறுப்பினர் அல்லது சிவில்/ இயந்திரவியல் பொறியியல் அல்லது NDT NDES HNDE அல்லது அதற்கான தகுதியுடன் தொடர்புடைய துறையில் மூன்று (03) வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

(2) **கட்டிட வடிவமைப்பாளர் - ஆண் /பெண் (நிரந்தர/தொண்டர்)** பட்டய கட்டட கலைஞர் தகுதி அல்லது (B Arch/MSc Arch மொரட்டுவை பல்கலைகழகத்தில்) பட்டம் பெற்றிருக்க வேண்டும் அல்லது (SLIA) பகுதி I மற்றும் பகுதி II இரண்டையும் நிறைவு செய்திருத்தல் அல்லது SLIA இன் பட்டதாரி அங்கத்துவத்துடன் UGC மற்றும் SLIA ஆல் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதும் பட்டம் இருத்தல் வேண்டும்.

(3) **நிலம் அளப்போர் - ஆண் / பெண் (நிரந்தர/தொண்டர்)**ஆய்வு அறிவியலில் பட்டம் அல்லது தியத்தலாவையில் உள்ள ISM நிறுவகத்தில் பட்டம் பெற்றிருத்தல்

(உ) **வைத்தியப் பிரிவு**

(1) **உடற்பயிற்சி சிகிச்சை அதிகாரி** (Physiotherapist) **ஆண்/பெண் (நிரந்தர)** விளையாட்டு விஞ்ஞானம் உள்ளடங்கலாக உடற்பயிற்சி சிகிச்சை தொடர்பான பட்டத்துடன் உடற்பயிற்சி சிகிச்சை சம்மந்தமாக இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(ஊ) **பல்வைத்தியப் பிரிவு**

(1) **பல் அறுவை மருத்துவர் - ஆண் /பெண் (நிரந்தர/தொண்டர்)** BDS பட்டம் (இலங்கை) அல்லது அதற்கு சமனான தகைமையுடன் இலங்கை வைத்திய சபையினால் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைகழகம் ஒன்றில் பெற்ற BDS பட்டம் இருத்தல் வேண்டும்.

(2) **பல் மருத்துவ மாணவர்கள் - ஆண்/பெண் (நிரந்தர)** பல் மருத்துவ மாணவர்கள் BDS (இலங்கை) பல்கலைக்கழக செமஸ்டர் 07-08 ம் (4 ஆண்டுக்கு சமமான) படிக்கும் மாணவர்கள் அல்லது 08 செமஸ்டர் (5 ஆண்டுக்கு சமமான) வெற்றிகரமாக முடித்த இலங்கை வைத்திய சபையினால் அனுமதிக்கப்பட்ட பட்டம் பெற்றிருத்தல்.

(3) **பயிற்சி பெறும்** (Pre-Intern) **வைத்தியர்- ஆண் /பெண் (நிரந்தர)** இலங்கை (Sri Lanka) BDS பட்டப் படிப்பில் ஏழு - எட்டு தவணை (7-8) நான்காம் வருடத்துக்கு சமனான பரீட்சைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அல்லது தவணை (8) பரீட்சைகளை (5 ஆம் வருடத்துக்கு சமனான) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் இலங்கை வைத்திய சபையினால் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற BDS அல்லது இலங்கை வைத்திய சபையினால் தற்காலிக அனுமதி பெறாத வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற BDS அதற்குச் சமமான பட்டம். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 05 ஆண்டு சேவை காலத்திற்குள் ERPDS பரீட்சையில் சித்தி பெற்று இலங்கை வைத்திய சபையில் அங்கீகாரம் பெறல் வேண்டும்.

(எ) **நீதிப் பிரிவு**

(1) **நீதி அதிகாரி - ஆண் /பெண் (நிரந்தர்/தொண்டர்)**

இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக இருத்தல் வேண்டும்.

(அ) குறைந்தபட்சம் 03 வருட காலம் மஜிஸ்டிக் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றம், மேல் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சேவை அனுபவம் இருத்தல் வேண்டும்.

(ஆ) ஆவணங்களை சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் தயாரிக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

(இ) நிறுவனத்தின் செயலக சேவைகள் பற்றிய ஆற்றல் இருத்தல்

(ஈ) ஆங்கிலம் சரளமாக பேசுதல் மற்றும் கணினி அறிவும் மேலதிக தகைமையாக கருதப்படும்.

(ஏ) **கால்நடை வைத்தியப் பிரிவு**

(1) **கால்நடை வைத்தியர் - ஆண் /பெண் (நிரந்தர)** கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு அறிவியல் இளங்கலை (BVSc) அல்லது இலங்கை கால்நடை மருத்துவ ஆணைக்குழுவால் (SLVC) பதிவுக்கு சமமான பட்டம். நிலுவையில் உள்ள SLVC பதிவுடன் BVSc பட்டம் பெற்றவர்களும் 06 மாத அவகாசகாலம் முடிவதற்கு உட்பட்டு பரிசீலிக்கப்படுவார்கள். சேவை அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(ஐ) **கலை நிகழ்ச்சிப் பிரிவு**

(1) **இசைக்கலைஞர்- (நடனக்குழு)** Dancing / Drumming – **ஆண் (நிரந்தர)** கலைப் பிரிவில் பட்டம் அல்லது நுண்கலை/நிகழ்ச்சிக் கலைகளின் டிப்ளோமா அல்லது இலங்கை தேசிய நடன மற்றும் சங்கீத இறுதி பரீட்சையில் சித்திடைந்திருத்தல் வேண்டும் மற்றும் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் நடன பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(ஒ) **கல்விப் பிரிவு**

(அ) **ஆங்கில மொழி விரிவுரையாளர் - ஆண் /பெண் (தொண்டர்)** ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைகழ கத்தால் ஆங்கிலத்தில் பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கிலத்தில் B.Ed. அல்லது TESL/TEFL/TESOL இல் வெளிவாரி டிப்ளோமா பெற்றிருத்தல் அல்லது ஆங்கிலம் ஒரு பாடமாக MA பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழி இலக்கியத்தில் MA பட்டம் பெற்றிருத்தல் அல்லது TESL/TEFL/TESOL இல் MA பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கில மொழி தொடர்பான 3 வருட கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தியாகிருத்தல் அல்லது SLIATE தேசிய கல்வித் திணைக்களத்தில் ஆசிரியர் கலா சாலையில் 2

வருட ஆங்கில மொழி தொடர்பான கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தியாகியிருத்தல் அல்லது CELTA/ DELTA கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தின் மூலமாக British Council இனால் கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தியாகிருத்தல் வேண்டும்.

மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் கட்டாயமாக 02 வருட கற்பித்தல் அனுபவம் மேலதிக தகைமைகளாக கருதப்படும்

(ஓ) **கணக்காளர் பிரிவு**

(அ) **கணக்காளர் அதிகாரி ஆண் /பெண் (நிரந்தர)** இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைகழகத் தினால் வர்த்தக/முகாமைத்துவ/கணக்கியல் அல்லது வணிகத்துறையில் பட்டம் இருத்தல் வேண்டும் மேலும் கீழ்க் காணப்படும் ஏதேனும் துறைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட துறையில் தகைமைகளுடன் கணக்காளர் துறை அல்லது கணக்காளர் அல்லாத துறை நிறுவனத்தில் குறைந்தபட்சம் 01 முதல் 03 ஆண்டுகள் வேலை அனுபவம் இருத்தல் வேண்டும்.

(1) இலங்கையில் முழுத்தகுதி பெற்ற பட்டயக்கணக்காளர் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவ கணக்காளர்களின் (CIMA) ஒத்த தகைமை அல்லது இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்களின் நிறுவனத்தின் (CMA) சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள்

அல்லது

(2) பட்டய கணக்கியல் தகைமை இருத்தல் வேண்டும் அல்லது ஐக்கிய இராஜ்ஜியத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தினால் பெற்ற தகைமை (CIMA) முகாமைத்துவ கணக்கியல் (CMA) தகைமை இருத்தல் வேண்டும்.

அல்லது

(3) இலங்கை பட்டய கணக்கியல் நிறுவனத்தில் சான்றுப்படுத்தப்பட்ட (CBA) வியாபார கணக்காளர் தகைமை இருத்தல் வேண்டும். ஐக்கிய இராஜ்ஜியத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தினால் பெற்ற தகைமை (CIMA) இருத்தல் வேண்டும். (CMA) முகாமைத்துவ கணக்கியல் தகைமை இருத்தல் வேண்டும்.

4. அனுபவம் குறிப்பிட்ட துறையில் தொழிற்தகைமை மற்றும் குறிப்பிட்ட துறையில் 2 வருட அனுபவம் இருத்தல் நேர்முகப் பரீட்சையின் போது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

5. **அடிப்படை கல்வித் தகைமை.-**

(அ) குறைந்தபட்சம் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தியும் ஆறு பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (மேலதிக மற்றும் கட்டாயமற்ற பாடங்கள்) மேலும் பொறியியல் பிரிவுகளில் (வானூர்தி மற்றும் பொது பொறியியல் பிரிவு, மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு) நேரடி நுளைவு அரசாணையமர்வு ஆட்சேர்ப்பில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் பட்டம் பெற்றிருப்பதுடன் சிறந்த தகைமையைக் கொண்டிருப்பின் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் முதல் அமர்வில் சித்தி அல்லது இரண்டாம் அமர்வில் திறமைச் சித்தி பெற்றிருப்பவர்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு**.- க.பொ.த. (சா.த.) பரீட்சைக்குப் பதிலாக NVQ நிலை 3 அல்லது அதற்கு மேல் அல்லது SLQF நிலை 1 அல்லது அதற்கு மேற்பட்ட தகுதிகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

(ஆ) குறைந்தபட்சம் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் எந்த பிரிவிலாவது ஒரே அமர்வில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- O/L களுக்குப் பதிலாக NVQ நிலை 4 அல்லது அதற்கு மேல் அல்லது SLQF நிலை 2 அல்லது அதற்கு மேற்பட்ட தகுதிகள் நேரடி நுழைவு விண்ணப்பதாரர்கள் சேர்கைக்கு க.பொ.த. (உ.த.) பரீட்சைக்குப் பதிலாக பரிசீலிக்கப்படும்.

(இ) **விசேட குறிப்பு.-**

Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) or Cambridge International Ordinary Level பரீட்சைகளில் (சா.த.) பரீட்சையில் பெறுபேறு சான்றிதழில் பௌதீகவியல் விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், இரசயானவியல் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலாக 06 பாடங்களில் ஒரே அமர்வில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் திறமைச்சித்திக்காக பெறப்படும் புள்ளிகளுக்கு சமனான அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளுக்கு வழங்கப்படும் பெறுபேறு பெற்றிருத்தல் வேண்டும். சர்வதேச பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் (Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) or Cambridge International Ordinary Level) க.பொ.த. (சா.த.) பரீட்சையில சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கான சாதாரண சித்தி இல்லாமல் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்க்கும் தினத்திலிருந்து 05 ஆண்டுக்குள் சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கான தேர்ச்சி தரத்தைப் பெற வேண்டும்.

Pearson Edexcel / Cambridge - International Advanced Level பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் மேலே காணப்படும் துறையில் விண்ணப்பிகும் போது க.பொ.த. (உ.த.) பரீட்சையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளுக்கு வேறு வேறாக குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் மற்றும் சித்திக்காக பெறவேண்டிய குறைந்த பட்ச புள்ளிக்கு (சமனான அல்லது மேலதிகமான) வழங்கப்படும் பெறுபேறுகள் பெற்றிருத்தல் வேண்டும்.

**6. அடிப்படை தகைமைகள்.-**

| | |
|---|---|
| அ. தேசிய இனம் | : ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். |
| ஆ. குடியியல் நிலை | : விவாகமானவர்/விவாகமாகாதவர் |
| இ. பால் | : ஆண் /பெண் (தேவையை பொருத்து) |
| ஈ. வயது | : 2024, சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று<br><br>**ஆராய்ச்சி அதிகாரி**<br>40 வயதிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.<br><br>**வேறு பிரிவுகளுக்கு**<br>18 வயதிற்கு குறையாமலும் 33 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| உ. உயரம் | :- ஆண்கள்-165 செ. மீ (5'5") அதற்கு மேலும்)<br>பெண்கள் -160 செ. மீ (5'3")அதற்கு மேலும்) |
| ஊ. நிறை | :- (ஆண்) 17 < உடற்பருமன் சுட்டி < 26<br>(பெண்) 17 < உடற்பருமன் சுட்டி < 25<br><br>:- உடற்பருமன் சுட்டி (BMI) = நிறை (கி . கி) / உயரம் (மீ)$^2$ |
| எ. மார்பு | :- ஆண் 32" (குறைந்தது) |
| ஏ. பார்வை வர்ணப்பதிவு மட்டம் | :- CP2 |
| ஐ. தொலை பார்வை | :- இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி மற்றும் கண்வில்லை பயன்படுத்தப்படாமல்). (வைத்தியப் பிரிவு/ பல்வைத்தியப் பிரிவு மாத்திரம் இரண்டு கண்களிலும் 6/18 மூக்குக் கண்ணாடி பயன்படுத்தியும் 6/6 இருத்தல் வேண்டும்) |

**7. விசேட குறிப்பு**

(அ) இரண்டாம் மூன்றாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத தேர்வுநாடிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை உடற் தகைமைமட்டம் ஆகியவற்றிற்கு குறைவானவர்களும் மேலும் விஷேட தகைமை கொண்டிராத விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

(ஆ) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களில் 03 ஆ (1) பகுதியின் தொழிற் தகைமைகளில் அடிப்படையில் ஆராய்ச்சி அதிகாரிகள் ஸ்குவாட்ரன் லீடர் போன்ற நிலைக்கும் வேறு பிரிவுகளுக்குரிய விண்ணப்பதாரர்களுக்கு பிலைட் லெப்டினன் அல்லது ப்ளையின் ஒப்பிசர் அல்லது பைலட் ஒப்பிசர் நிலையில் அலுவலராக அவர்களின் தொழிற் தகைமை, சேவை அனுபவத்திற்கு அமைவாக வான்படை தளபதியால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(இ) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் எழுத்து, செயன்முறை மற்றும் அதிகாரி தர நிர்ணய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

(ஈ) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் இலங்கை வான்படை மருத்துவ பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். வான்படை ஆளுநரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

(உ) அனைத்து முனைவர் பட்டங்கள் மற்றும் முதுநிலை பட்டங்கள் மற்றும் டிப்ளோமாக்கள் இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவையாயக இருத்தல் வேண்டும்.

(ஊ) தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

(எ) விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

(ஏ) அரசகரும மொழித் தேவைப்பாடுகள்:- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் இலங்கை குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே உருவாக்கப்பட்ட அல்லது இதன் பின்னர் உருவாக்கப்படும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

(ஐ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை தளபதியால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப்படுவார்கள். பயிற்சி காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

(ஒ) மருத்துவப் பரீட்சையில் சித்திபெற்ற விண்ணப்பதாரர்கள் அனைவரும் அதிகாரி தர நிர்ணய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். சித்திபெற்ற விண்ணப்பதாரர்கள் (Familiarization Training) ஒருங்கிணைப்பு பயிற்சிக்காக இலங்கை வான்படை பயிற்சி நிலையத்திற்கு அழைக்கப்படுவர். இந்த ஒருங்கிணைப்பு பயிற்சியை நிறைவேற்றிய விண்ணப்பதாரர்கள் இறுதி நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஒவ்வொரு துறையிலும் விண்ணப்பதாரர்கள் இறுதி நேர்முக பரீட்சைக்காக (stand by list) தர பட்டியலில் உள்ளபடி அழைக்கப்படுவர். அனைத்து பரீட்சைகளும் தர பட்டியலிற்கு சேர்த்து பட்டியலிடப்படும். விண்ணப்பதாரர்கள் தங்களது நோய், குறைபாடுகள் போன்றவற்றை பற்றி தெரியப்படுத்தாமல் நேர்முகப் பரீட்சையில் எந்தச் சந்தர்ப்பத்திலாவது கண்டுபிடிக்கப்பட்டால் அவர் நீக்கப்படுவார்.

(ஓ) இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதி 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு வான் படைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்". ஆயின் ஒருதலைப்பட்சமாக

தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான் படைச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப்படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக் காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்பட மாட்டாது. வான் படையிலிருந்து ஓய்வுபெறுவது வான்படை ஓய்வூதியங்கள் பணிக்கொடைகள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

(ஔ) தர பட்டியியலில் (standby list) உள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்காக இறுதி நேர்முக பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் இலங்கை வான்படைக்கு சேவையாற்றுவது தொடர்பாக தெரிவிக்க வேண்டும். இறுதி நேர்முகப் பரீட்சையில் சித்தி பெற்று இலங்கை வான்படைக்கு இணையாத அல்லது இது பற்றி தெறிவிக்காத விண்ணப்பதாரருக்கு இலங்கை வான்படையில் எதிர்வரும் காலங்களில் விண்ணப்பிக்க முடியாது.

(ஃ) துர்நடத்தை அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை கொண்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் எந்நேரத்திலும் நேர்முகப் பரீட்சையில் இருந்து வெளியேற்றப்படுவார்கள்.

(அஅ) அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

(அஆ) வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

(அஇ) திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

(அஈ) திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 8 (ஈ) (11) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

**8. சம்பளமும் கொடுப்பனவுகளும்**

அ. இலங்கை வான் படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு:

| வருடம் / நிலை | 2023 (வருடத்திற்கு) |
|---|---|
| பைலட் ஒபிசர் (மாணவ நுழைவு) | ரூபா 502,860.00 |
| ப்ளையின் ஓபிசர் | ரூபா 571,380.00 - (30 × ரூபா 16020) = ரூபா 1,051,980.00 |
| ப்ளைற் லெப்டினன்ட் | ரூபா 667,500.00 - (24 × ரூபா 16020) = ரூபா 1,051,980.00 |
| ஸ்குவாட்ரன் லீடர் | ரூபா 731,580.00 - (22 × ரூபா 16020) = ரூபா 1,084,020.00 |
| விங்க் கமாண்டர் | ரூபா 751,140.00 - (17 × ரூபா 19560) = ரூபா 1,083,660.00 |

ஆ. வைத்திய அதிகாரிகளுக்கான சம்பள கொடுப்பனவு

| வருடம் / நிலை | 2023 (வருடத்திற்கு) |
|---|---|
| ஆரம்ப பிரிவு | ரூபா 651,480.00 (2 × ரூபா 16,020-7 ×16,140-2 × ரூபா 19,560- 16 × ரூபா 26,040) = ரூபா 1,252,260.00 |
| தரம் II | ரூபா 699,660.00 (6 × ரூபா 16140 - 2 × ரூபா 19560 - 16 × ரூபா 26,040) = ரூபா 1,252,260.00 |
| தரம் I | ரூபா 861,660.00 (15 × ரூபா 26,040) = ரூபா 1,252,260.00 |
| விஷேட பிரிவு | ரூபா 1,056,000.00 (12 × ரூபா 32,400) = ரூபா 1,444,800.00 |

இ. வைத்திய அதிகாரிகளுக்கான வேறு கொடுப்பனவுகள்.

(1) ஓய்வூதிய கொடுப்பனவு மாதமொன்றுக்கு மாதமொன்றுக்கு

ஆரம்ப பிரிவு - ரூபா 1,700.00
தரம் II - ரூபா 1,700.00
தரம் I - ரூபா 3,400.00
விஷேட பிரிவு - ரூபா 3,400.00

(2) ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு மாதமொன்றுக்கு

ஆரம்ப பிரிவு - ரூபா 2,125.00
தரம் II - ரூபா 1,700.00
தரம் I - ரூபா 400.00

(3) நட்ட கொடுப்பனவு மாதமொன்றுக்கு- ரூபா 35,000.00

(4) மேலதிக வேலை கொடுப்பனவு மணித்தியாலத்திற்கு

ஆரம்ப பிரிவு - ரூபா 687.00
தரம் II - ரூபா 796.00
தரம் I - ரூபா 1,101.00
விசேட பிரிவு - ரூபா 1,302.00

(5) தேவையை பொருத்து பந்தி 5 (ஈ) 18 உள்ள சேவை கொடுப்பனவு வழங்கப்படும்

ஈ. சேவை கொடுப்பனவுகள்.-

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 7,800.00
(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250.00 வீதம் வழங்கப்படும்.
(3) கடினப்படி மாதமொன்றுக்கு ரூபா 620.00 (நாளொன்றுக்கு ரூபா 20.00)
(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,380.00 (மாதமொன்றுக்கு)
(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,100.00 (நாளொன்றுக்கு ரூபா 100.00)
(6) இடைக்கால கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000.00
(7) சீருடை பேணுதல் படி- எயார் கொமாடோர் மற்றும் அதற்கு மேல் நிலைகளுக்கு ரூபா 600.00, குருப் கப்டன் மற்றும் அதற்கு குறைந்த நிலைகளுக்கு ரூபா 525.00 வழங்கப்படும்
(8) சேவையாளர் படி: மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)
(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 36,008.36 ((வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால் ஒவ்வொரு நாட்களுக்கும் ரூபா 1,161.56 வீதம்)

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் பைலற் ஆபீசர் இருந்து ஸ்கோர்டன் லீடர் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 3,200.00 இருந்து ரூபா 8,500.00 - வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

(12) தொலைபேசி கட்டணம் விங்கமாண்டர் முதல் கூடிய நிலைகளுக்கு மாதமொன்றுக்கு ரூபா 1,875.00 இருந்து ரூபா 3,750.00 .

(13) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், துணைவிக்கும் பிள்ளைகளுக்கும் )

(14) விமானப்படை முகாமிற்குள் வசிக்கும் அலுவலருக்கு மாதமொருதடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு.

(15) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(16) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்)

(17) சேவைக் கொடுப்பனவு ரூபா 300.00 ரூபா 400.00 ரூபா 500.00 (வைத்திய, பல் வைத்தியர்களுக்கு முடிவுற்ற சேவைக் காலத்தை பொறுத்து).

(18) பொறியியல் அதிகாரிகளுக்கான கொடுப்பனவு மாதாந்தம் ரூபா 15,000.00 (பொறியியல் அதிகாரிகளுக்கு மாத்திரம்)

(19) பட்டயப் பொறியியலாளருக்கான கொடுப்பனவு முதல் மாதத்திற்கு 15,000.00 ரூபா முதல் 30,000.00 ரூபா வரை (பட்டயப் பொறியியல் அதிகாரிகளுக்கு மட்டும்).

(20) மேலதிக கொடுப்பனவு ரூபா 1,500.00 (வைத்திய, பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(21) 1/20 கொடுப்பனவு மாதமொன்றுக்கு - அடிப்படைச் சம்பளம் × 1/20 × 3 நாட்கள் மட்டும். (வைத்திய, பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்)

(22) மேலதிக கொடுப்பனவு 120 மணி ஒரு மாதத்திற்கு (வைத்திய, பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(23) தொலைபேசி கொடுப்பனவு மாதாந்தம் - விஷேட வைத்தியர் ரூபா 6,000.00
வைத்தியர் ரூபா 3,000.00

(24) விசேட இடைக்கால கொடுப்பனவுகள் - மாதத்திற்கு ரூபா 5,000.00.

(25) பட்டயக் கட்டிடக்கலைஞர் கொடுப்பனவு முதல் மாதத்திற்கு ரூபா 15,000.00 முதல் ரூபா 30,000.00 வரை (பட்டயப் பொறியியல் அதிகாரிகளுக்கு மட்டும்).

9. ஓய்வூதியங்கள் /பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்கு காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவுச் சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின் படியாகும்.

10. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் -**

அ. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2023, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் குறிப்பிடபட்ட விண்ணப்பம் "தலைமை ஆட்சேர்ப்பு அதிகாரி, ஆட்சேர்ப்பு தலைமை காரியாலயம், தொழிற்துறை பாடசாலை, இலங்கை விமானப்படை ஏகல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் மேல் அரசாணையமர்வு அலுவலர் விண்ணப்பம்.................... பிரிவு எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களை www.airforce.lk/joinus/apply எனும் இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியும். முடிவு திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

ஆ. அரசாங்க சேவையில் / கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/ குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின் /குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பங்களை www.airforce.lk/joinus/apply எனும் இணையத்தளத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியும், இணையத்தளத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்கள் பந்தி 10 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும்.

ஈ. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதி மற்றும் பிரதிகளை நேர்முக பரீட்சையின் போது சமரப்பித்தல் வேண்டும் .

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப் பிரதி (கல்விச்சட்டகோவையின் நோக்கற்திக்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(2) தேசிய அடையாள அட்டை மூலப் பிரதி.

(3) விண்ணப்பித்த கிளைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ், மூலப் பிரதி.

(4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில் /தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன் /அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்) மூலப் பிரதி.

(5) இரு குணநலச் சான்றிதழ்கள். (ஆறு மாதத்திற்கு உட்பட்ட) இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்விகற்ற பாடசாலை அதிபரினதாகவும் மற்றையது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரரை அறிந்துள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில்தருநரினதாக இருத்தல் வேண்டும்.)

(6) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள், மூலப் பிரதி.

(7) ஆறு மாதத்திற்கு உட்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்

(8) பாடசாலை விடுகைப் பத்திரம்

(9) வெற்று பயில் கவர் மற்றும் பயில் டெக்

(10) வர்ணப் புகைப்படம் 2×2 1/2 அங்குல அளவு கிராம அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்ட

உ. ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும்போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வு நாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டா .

ஊ. ஆவணங்களோ ஆவணங்களின் மூலப்பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

எ. விண்ணப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

ஏ. விண்ணப்பத்தில் வயது, உயரம், நிறை மற்றும் அடிப்படை கல்வித் தகைமை எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, விண்ணப்பதாரரைத் தகைமையற்றவராக்கும்.

11. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவு செய்யப்படுமுன் கணடுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

12. தெரிவு செய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன –

அ. மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையை பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப் பிற் கிணங் க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவு சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.

ஆ. நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் இடம் நேரம் திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டாது.

இ. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

ஈ. ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

உ. நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

ஆர்ஏயூபி ராஜபக்ஷ
RSP and two Bars, VSV, USP, MSc (MOA) USA,
MSc (Def Stu) in Mgt, MA in IS&S (UK), BSc (Def Stu),
MIM (SL), AMIE (SL), rcds, psc
விமானப்படைத் தளபதி,
எயார் மார்ஷல்.

தலைமையகம்,
இலங்கை விமானப்படை,
த.பெ.எண். 594,
கொழும்பு 2.

அலுவலகப் பாவணைக்கு

**அரசாணைபெற்ற அலுவலருக்கான விண்ணப்பப்படிவம்**

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் ................. பிரிவில்

1. தேசிய இனம் : ..........................................................................................................................................
(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா? பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக).

2. முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு):..........................................................................................
..........................................................................................................................................................

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ..........................................................................................................

4. விண்ணப்பிக்கும் துறை : .......................................................................................................

5. விண்ணப்பிக்கும் பிரிவு : .......................................................................................................

6. நிரந்தர முகவரி :..........................................................................................................................................

7. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :........................................................................................

8. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள வான்படை முகாம் :.........................................................................................

9. பாடசாலை பற்றிய விபரங்கள் :.............................................................................................................................

10. அஞ்சல் முகவரி :........................................................................................................................................

11. E-mail முகவரி :........................................................................................................................................

12. பிறந்த திகதி :...........................................................................................................................................
(2024, சனவரி 01 ஆந் திகதியன்று) வயது : வருடங்கள்:............ மாதங்கள்:............ நாட்கள்:.............

13. உயரம் : சென்றி மீட்டரில் ........................................................... ( அடி............அங்குலம்....................)

14. மார்பு அளவு: .................... அங்குலம்

15. நிறை : .................... கிலோ கிராம்

16. மாவட்டம்: ..........................................................................................................................................................

17. தேர்தற் தொகுதி :..................................................................................................................................................

18. கிராம அலுவலர் பிரிவு :.........................................................................................................................

19. தொலைபேசி இலக்கம். :...................................................................................................

20. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :..........................................................................

21. பாடசாலை அத்துடன் /அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை / சர்வகலா சாலை பெயர்கள் | பரீட்சை | ஆண்டு மற்றும் சுட்டிலக்கம் | பொதுப் பாடசாலைகளும் சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) | |
|---|---|---|---|---|
| | க.பொ.த. (சா/த) | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | க.பொ.த. (உ/த) | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| பல்கலைக்கழக பெயர் | | | | |
| பல்கலைக்கழக/ தொழில் தகைமைகள் வேறு | பட்டம் அல்லது டிப்ளோமா | | | |
| | எந்தவொரு தொழில்முறை அமைப்பிலும் உறுப்பினர் | | | |

22. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :

23. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப்பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

24. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| முழுப்பெயர் | தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் | தொழில் | | தற்போதைய முகவரி |
|---|---|---|---|---|
| | | முன்பு | தற்போதைய | |
| தந்தை | | | | |
| தாய் | | | | |
| சகோதர /சகோதரிகள் | | | | |
| | | | | |
| | | | | |

25. நெருங்கிய உறவினர் யாரேனும் முன்பு அல்லது தற்போது வான் படையில் சேவையாற்றினால் அது பற்றிய விபரங்கள் :

| நிலை | பெயர் | பிரிவு /துறை | தற்போதைய விபரம் |
|---|---|---|---|
| | | | |

26. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் : (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

| தொடர் இல. | விபரம் | பாடசாலை | மாகாணம் | தேசிய | சர்வதேச |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

27. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) ..............................................................................................................

28. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை : ...........................................................................................................

29. இலங்கை வான் படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிசில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :.......................

30. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா ? அல்லது பிணையில் விடப்பட்டீரா ? அப்படியாயின் விபரங்களை தருக : ..........................................................................................................

31. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில் /கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி /தேசிய வங்கி /பல்கலைக்கழகங்கள் /அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட ) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் : ........................................................................

32. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

*33.* விண்ணப்பதாரர் கைச்சாத்திட வேண்டிய வெளிப்படுத்துகை :

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

.................. ..........................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

*08-1243/1*

---

## இலங்கை நிரந்தர விமானப்படை

### பயிலிளவல் ஆண்/பெண் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்

*1.* இலங்கை நிரந்தர வான்படையின் கீழ் வரும் பிரிவுகளில் பயிலிளவல் ஆண் /பெண் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

அ. பொதுக்கடமை விமான ஓட்டுநர் பிரிவு (ஆண்)
ஆ. வானூர்தி மற்றும் பொது பொறியியல் பிரிவு (ஆண்/பெண்)
இ. இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் பிரிவு (ஆண்)
ஈ. தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு (ஆண்)
உ. வான் வழி நடத்துனர் பிரிவு (வான் வழி கட்டுப்பாடு) (ஆண்)
ஊ. ரெஜிமன்ட் பிரிவு (ஆண்/பெண்)
எ. உபகரணப் பிரிவு (ஆண்/பெண்)
ஏ. நிர்வாகப் பிரிவு (ஆண்/பெண்)
ஐ. பொலிஸ் பிரிவு (ஆண்)

*2.* கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண் / பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*3.* **விஷேட தகைமை.**- BSc (Aviation Studies) பட்டப் பயிற்சிக்கு உட்செல்வதற்கான தகைமை (ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைகழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட) மேலும் பட்டப்படிப்பு திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பின் பல்கலைக்கழகழகத்திற்கு தகுதி பெற்றுள்ளனரா எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

அ. **பொதுக்கடமை விமான ஓட்டுனர் /வான் வழி நடத்துனர் பிரிவு (வான் வழி கட்டுப்பாடு)**

குறைந்தபட்சம் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம் / தமிழில் சித்தி அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக/உயிரியல் பிரிவில் (இயற்பியல் ஒரு கட்டாய பாடம்) அல்லது தொழில்நுட்ப பிரிவில் (தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் கட்டாய பாடம்) ஆகியவற்றில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் .

ஆ. **வானூர்தி மற்றும் பொது பொறியியல் பிரிவு (Aeronautical) /இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் பிரிவு**

குறைந்தபட்சம் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச் சித்தியும் சிங்களம் / தமிழில் சித்தி அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் (இணைந்த கணிதம், பௌதிகவியல் கட்டாய பாடம்) அல்லது தொழில்நுட்ப பிரிவில் (தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் பொறியியல்

தொழில்நுட்பம் கட்டாய பாடம்) ஆகியவற்றில் இரண்டு திறமைச்சித்தி உட்பட மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இ. **தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு**

குறைந்தபட்சம் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம் /தமிழில் சித்தி அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும் . க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதாவது ஒரு பிரிவில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு ஒரு பிரதான பாடமாகவோ அல்லது பௌதீக விஞ்ஞான பாடமாகவோ இருப்பதுடன் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் .

ஈ. **உபகரணப் பிரிவு / நிர்வாக பிரிவு/ரெஜிமன்ட் பிரிவு /பொலிஸ் பிரிவு**

குறைந்த பட்சம் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம் /தமிழில் சித்தி அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக/ உயிரியல் / வர்த்தக / தொழில்நுட்ப / கலை பிரிவுகளில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (மேலும் பொலிஸ் பிரிவில் 5'8" உயரம் இருக்குமாயின் ஆட்சேர்த்தலில் முந்துரிமை வழங்கப்படும்).

4. **விஷேட குறிப்பு**.- Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) or Cambridge International Ordinary Level பரீட்சைகளில் (சா.த.) பரீட்சையில் பெறுபேறு சான்றிதழில் பௌதீகவியல், விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், இரசயானவியல் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலாக 06 பாடங்களில் ஒரே அமர்வில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் திறமைச் சித்திக்காக பெறப்படும் புள்ளிகளுக்கு சமனான அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளுக்கு வழங்கப்படும் பெறுபேறு பெற்றிருத்தல் வேண்டும். சர்வதேச பாடசலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் (Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) or Cambridge International Ordinary Level) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கான சாதாரண சித்தி இல்லாமல் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்க்கும் தினத்திலிருந்து 05 ஆண்டுக்குள் சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கான தேர்ச்சி தரத்தை பெற வேண்டும்.

Pearson Edexcel/Cambridge - International Advanced Level) பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் மேலே காணப்படும் துறையில் விண்ணப்பிகும் போது க.பொ.த. (உ.த.) பரீட்சையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளுக்கு வேறு வேறாக குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் மற்றும் சித்திக்காக பெறவேண்டிய குறைந்தபட்ச புள்ளிக்கு (சாமனான அல்லது மேலதிகமாக) வழங்கப்படும் பெறுபேறுகள் பெற்றிருத்தல் வேண்டும்.

5. **வேறு தகைமைகள்**.- இவற்றுக்கு மேலதிகமாக விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாக பூர்த்திசெய்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| அ. தேசிய இனம் | : | ஓர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும். |
| ஆ. வயது | : | 2024, சனவரி 01 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 22 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். |
| இ. உயரம் | : | ஆண் சென்றிமீட்டர் 165 (5அடி 5 அங்குலத்திற்கு) குறையாதிருத்தல் வேண்டும் |
| | : | பெண் சென்றிமீட்டர் 160 (5அடி 3 அங்குலத்திற்கு) குறையாதிருத்தல் வேண்டும் |
| ஈ. உடல் நிறை | : | ஆண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 26<br>பெண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 25<br>உடற்பருமன் சுட்டி (BMI) = நிறை (கி. கி.) / உயரம் (மீ.)$^2$ |
| உ. மார்பு | : | ஆண் -32" (குறைந்தது) |

ஊ. பார்வை வர்ணப்பதிவு மட்டம் : CP2

எ. தொலை பார்வை : இரண்டு கண்களிலும் 6/6
(மூக்குக் கண்ணாடி மற்றும் கண் வில்லை பயன்படுத்தப்படாமல்)

ஏ. திருமணமானவர்/திருமணமாகாதவர் : விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிலிளவல் எவரும் பயிற்சியின் போதும் ஆணை பெற்ற திகதியிலிருந்து ஓராண்டு காலத்துக்கும் திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள சாதனைகள் விசேட கவனத்தில் கொள்ளப்படும்.

7. மூன்றாம் நான்காம் மற்றும் ஐந்தாம் பந்தியின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றிற்கு குறைவானவர்களும் உடற் தகைமை மட்டத்தை கொண்டிராதவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

8. தேவையான தகைமை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

9. **சேவை நிபந்தனைகள்**.-

அ. தேர்வுநாடி தொடக்கத்தில் ஏனைய பதவி வரிசைகளுக்குப் போன்ற அதே விதத்தில் வான்படையில் ஒரு பயிலிளவலாகச் சேர்க்கப்பட்டு அடிப்படை யுத்தப் பயிற்சியொன்றை மேற்கொள்வர். அடிப்படை பயிற்சி திருப்திகரமாக முடிவடைந்ததும் மற்றைய பயிற்சிக்கான காலப்பகுதி பயிலிளவல் சேவையின் பிரிவைப் பொருத்து இருக்கும். பின் ஏனைய பதவி வரிசையிலான ஆட்சேர்ப்பு நீக்கப்பட்டு பைலட் ஒபிசர் பதவி வரிசையில் நிரந்தர ஆணையொன்றை பெறுவர்.

ஆ. பயிலிளவல் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான் படை தளபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

இ. பயிலிளவல்களாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின் போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

ஈ. ஒவ்வொரு பயிலிளவலுக்கும் அனைத்து வகை சீருடைகள் உபகரணங்கள் மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

உ. பயிலிளவலின் பயிற்சி காலத்தின்போது பயிலிளவலுக்கு வான் படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப் பட்டு உணவும் வழங்கப்படும்.

ஊ. ஒரு பயிலிளவல் பயிற்சியின் போது ஆணையொன்றைப் பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய பயிலிளவலின் பொருட்டு அந்தகாலவரையில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

எ. ஒரு பயிலிளவல் தமது பயிற்சியின் போது எச்சமயத்திலும் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்களுக்காக ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரி களினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின்சார்பில் வான்படை தளபதியுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படியும் தேவைப்படுத்தப்படுவர்.

ஏ. பெற்றோர் அல்லது பாதுகாவலர் உட்பந்திகள் ஊ, எ தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 34 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன்

சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத் தேர்வுநாடிகள் பயிலிளவல்களாக நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப்படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

ஐ. பந்தி 03 இலும் 05இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வு நாடிகள் முதலாவது நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெறுபவர்கள் அலுவலர் தேர்வு நாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதுடன் எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச்சபைக்கு உட்படுத்தப்படுவர். முதலாவது நேர்முகப்பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டுவதுடன் இதில் சித்தி பெற்ற பொதுக்கடமை விமான ஓட்டுனருக்கு விஷேட Aircrew மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர். தங்களது நோய், குறைபாடுகள் போன்றவற்றை பற்றி தெரியப்படுத்தாமல் நேர்முக பரீட்சையில் எந்த சந்தர்ப்பத்திலாவது கண்டுபிடிக்கப்பட்டால் அவர் நீக்கப்படுவார்.

ஒ. மருத்துவ பரீட்சையில் சித்திபெற்ற விண்ணப்பதாரர்கள் அனைவரும் அதிகாரி தர நிர்ணய பரீட்சைக்கு (Officer Quality Test) உட்படுத்தப்படுவர். அதிகாரி தர நிர்ணய பரீட்சைக்கு பின்னர் பொதுக்கடமை விமான ஓட்டுனர்கள் விமானத்தில் செல்லும் திறமையும் பரீட்சிக்கப்படும் அலுவலர் தரப்பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். இதில் சித்தி பெற்ற விண்ணப்பதாரர்கள் இறுதி நேர்முக பரீட்சையிற்கு அழைக்கப்படுவர். ஒவ்வொரு துறையிலும் விண்ணப்பதாரர்கள் இறுதி நேர்முக பரீட்சையிற்காக தங்கள் பெற்ற புள்ளிகளுக்கு அமைவாக (stand by list) தர பட்டியலில் உள்ளபடி அழைக்கப்படுவர். அனைத்து பரீட்சைகளும் தர பட்டியலிற்கு சேர்த்து பட்டியியலிடப்படும்.

ஓ. பொதுக்கடமை விமான ஓட்டுனர்கள் விமானத்தில் செல்லும் திறமை பரீட்சிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் இதில் சித்தி பெறாதவர்களுக்கு நேர்முக பரீட்சையில் இருந்து வெளியேறவோ அல்லது வெற்றிடங்கள் இருக்கும் வேறு கிளைகளுக்கோ தாங்கள் அதிகாரி தர நிர்ணய பரீட்சையில் (Officer Quality Test) புள்ளிகளின் அடிப்படையில் இலங்கை வான்படையிக்கு இணைய முடியும். விமானத்தில் செல்லும் திறமை பரீட்சிக்கப்பட்டு சித்தி பெறாத விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் காலங்களில் பொதுக்கடமை விமான ஓட்டுனர் பிரிவில் விண்ணப்பிக்க முடியாது.

ஔ. தர பட்டியயலில் (stand by list) உள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்காக இறுதி நேர்முக பரீட்சையிற்கு தோற்றும் விண்ணப்பதாரர்கள் இலங்கை வான்படைக்கு சேவையாற்றுவது தொடர்பாக தெரிவிக்க வேண்டும். இறுதி நேர்முக பரீட்சையில் சித்தி பெற்று இலங்கை வான்படைக்கு இணையாத அல்லது இது பற்றி தெரிவிக்காத விண்ணப்பதாரருக்கு இலங்கை வான்படையில் எதிர்வரும் காலங்களில் விண்ணப்பிக்க முடியாது.

அஅ. துர்நடத்தை அல்லது ஒழுக்காற்று கொண்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் எந்நேரத்திலும் நேர்முகப் பரீட்சையில் இருந்து வெளியேற்றப்படுவார்கள்.

அஆ. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

அஇ. திருமணமாகிய அலுவலராயின் (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவை யாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்

அஈ. அனைத்து அலுவலரும் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

அஉ. அனைத்து அலுவலருக்கும் வான் படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

10. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கை குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆகப்பெற்ற அல்லது இதன்பின்னர் ஆகப்பெரும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

11. **சம்பளமும் கொடுப்பனவுகளும்.-**

அ. ஒவ்வொரு நிலைகளுக்கும் பொருந்தக்கூடிய ஒருங்கிணைந்த ஊதியம் பின்வருமாறு, மேலும் கீழே குறிப்பிடப் பட்டுள்ள அனைத்து ஒருங்கிணைந்த சம்பளங்களும் குறிப்பிட்ட ஆரம்ப படியாகும்.

| வருடம் | 2023 (வருடத்திற்கு) |
|---|---|
| நிலை | |
| பயிலிளவல் | 388,560.00 |
| பைலட் ஒபிசர் ( மாணவர் நுழைவு) | 463,260.00 |
| பைலட்ஒபிசர் (மாணவர் அல்லாத நுழைவு) | 502,860.00 |
| ப்ளையின் ஒபிசர் | 571,380.00 - (30 × 16,020) = 1,051,980.00 |
| ப்ளைற் லெப்டினன்ட் | 667,500.00 - (24 × 16,020) = 1,051,980.00 |
| ஸ்குவாட்ரன் லீடர் | 731,580.00 - (22 × 16,020) = 1,084,020.00 |
| விங் கமாண்டர் | 751,140.00 - (17 × 19,560) = 1,083,660.00 |

ஆ. ஏனைய கொடுப்பனவுகள்

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 7,800.00

(2) உற்சாகமூட்டுங் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250.00 வீதம் வழங்கப்படும்.

(3) கடினப்படி மாதமொன்றுக்கு ரூபா 620.00 (ஒரு நாளைக்கு ரூபா 20.00)

(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,380.00 (மாதமொன்றுக்கு)

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,100.00 (ஒரு நாளைக்கு ரூபா 310.00)

(6) இடைக்கால கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 1,000.00.

(7) சீருடை பேணுதல் படி- எயார் கொமாடோர் மற்றும் அதற்கு மேல் நிலைகளுக்கு ரூபா 600.00, குருப் கப்டன் மற்றும் அதற்கு குறைந்த நிலைகளுக்கு ரூபா 525.00 வழங்கப்படும்

(8) சேவையாளர் படி: மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்)

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 36,008.36 வழங்கப்படும்

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை).

(11) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 3,200.00 இருந்து ரூபா 8,500.00 - வாடகைப்படிகள் கொடுப்பனவு வழங்கப்படும்.

(12) தொலைபேசி கட்டணம் விங்கமாண்டர் நிலையிலிருந்து மாதமொன்றுக்கு ரூபா 1,875.00 இருந்து ரூபா 3,750.00 வரை.

(13) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், துணைவிக்கும் பிள்ளைகளுக்கும் )

(14) விமானப்படை முகாமிற்குள் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு.

(15) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும்.

(16) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையதாயின் குடும்பத்தினருக்கும்).

5. **விசேட குறிப்பு.-**

அ. Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) மற்றும் Cambridge International சாதாரண தரப் பரீட்சைகளில் சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கான சாதாரண சித்தியின்றி விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து 05 வருடங்களுக்குள் சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கான சித்தியை பெற வேண்டும்.

ஆ. NVQ நிலை 03 அல்லது SLQF நிலை 01 அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ் சாதாரண தரத்திற்கு பதிலாக கருதப்படும் மற்றும் NVQ நிலை 04 அல்லது SLQF நிலை 02 அல்லது அதற்கு மேல் வைத்திருப்பது உயர் தரத்திற்கு பதிலாக நேரடி நுளைவு விண்ணப்பதாரர்களின் சேர்க்கைக்கு மட்டுமே கருதப்படும்.

6. **ஏனைய தகைமைகள்** .-

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| (1) தேசிய இனம் | : | ஓர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும். |
| (2) வயது | : | 2024, சனவரி ( January) 01 ஆந் திகதி<br>நிரந்தர<br>ஆண் - 18 -23 இருத்தல் வேண்டும்<br>பெண் - 18 -22 இருத்தல் வேண்டும்<br>தொண்டர்<br>ஆண் - 18 -28 இருத்தல் வேண்டும்<br>பெண் - 18 -26 இருத்தல் வேண்டும்<br>நேரடி ஆட்சேர்ப்பு<br>ஆண் - 18 -28 இருத்தல் வேண்டும்<br>பெண் - 18 -30 இருத்தல் வேண்டும்<br>(மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் -<br>தொண்டர் வின்னப்பதாரர்களுக்கு மாத்திரம்)<br>பெண் - 18 -26 இருத்தல் வேண்டும் |
| (3) உயரம் | : | ஆண் - 5 அடி 4 அங்குலமும் (162cm) அதற்கு மேலும்<br><br>ஆண் - 5 அடி 2 அங்குலமும் (157cm) அதற்கு மேலும்<br>(மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் -<br>தொண்டர் வின்னப்பதாரர்களுக்கு மாத்திரம்)<br>பெண் - 5 அடி 2 அங்குலமும் (157cm) அதற்கு மேலும் |
| (4) உடல் நிறை | : | ஆண் 17 $<$ உடற்பருமன் சுட்டி (BMI) $<$ 26<br>பெண் 17 $<$ உடற்பருமன் சுட்டி (BMI) $<$ 25<br>உடற் பருமன் சுட்டி (BMI) $= \frac{\text{நிறை (கி . கி)}}{\text{உயரம் }^2\text{ (மீ)}}$ |
| (5) பார்வை வர்ணப்பதிவு மட்டம் | : | $CP_2$ |

(6) தொலை பார்வை இரண்டு கண்களிளும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

| | | |
|---|---|---|
| (7) மார்பு | : | குறைந்தது 32 அங்குலம் (ஆண்) |
| (8) குடியியல் நிலை | : | நிரந்தர - விவாகமாகாதவர்<br>நேரடி ஆட்சேர்ப்பு (நிரந்தர /தொண்டர் )- விவாகமாகாதவர் / விவாகமானவர் |

(அ) நிரந்தர வான் படை வீரர்கள்/ வீராங்கனைகள் விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். வான் படையில் இணைந்து நான்கு ஆண்டுகள் பூர்த்தியடைந்த பின்பும் அடிப்படை தொழிற்துறை பயிற்சி முடிந்து 01 வருடத்தின் பின்பும் விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

(ஆ) விவாகமாகாமல் 25 வயதை விட அதிமான வயதில் வான் படைக்கு இணையும் படை வீரர்கள் /வீராங்கணைக்கு வான் படையில் இணைந்து ஓராண்டின் பின்னர் விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

(இ) விவாகமாகாமல் நேரடி ஆட்சேர்ப்பில் இணையும் வான் படை வீரர்கள் /வீராங்கணைகளுக்கு வான் படையில் இணைந்து ஓராண்டின் பின்னர் விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

7. பந்தி 03, 04 மற்றும் 06வது பந்திகளில் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித் திறமைகளை நிறைவு செய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறிந்துரைக்கப்பட்ட உடற் தகைமை மட்டத்தை கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். தேவையான உயரம், நிறை, கண் பார்வை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

8. விளையாட்டுத் துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற் கொள்ளப்படும்.

9. **சேவை நிபந்தனைகள்.-**

அ. தெரிவு செய்யப்படும் தொழில் துறைக்குரிய நிரந்தர வான்படை வீரர் / நிரந்தர வீராங்கணைகள் அடிப்படை பயிற்சியும் அதன் பின் தொழில் துறைப் பயிற்சி வழங்கப்படுவதுடன், வான் படை வீரர்கள்/ வீராங்கணைகள் அடிப்படை பயிற்சியும் வழங்கிய பின் அவர்கள் (நிரந்தர/தொண்டர்) சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

ஆ. வான்படை வீரர்/ வீராங்கணைகள் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான் படை தளபதியினால் தீர்மானிக்கப்படவாறான இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

இ. வான்படை வீரர் /வீராங்கணைகளாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின் போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

ஈ. ஒவ்வொரு வான்படை வீரர் /வீராங்கணைக்கும் அனைத்து வகை சீருடைகள் உபகரணங்கள் மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

உ. வான்படை வீரர் /வீராங்கணைகள் பயிற்சி காலத்தின்போது வான்படை வீரர் /வீராங்கணைகள் வான் படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

ஊ. ஒரு வான்படை வீரர்/வீராங்கணைகள் பயிற்சியின் போது பயிற்சியை பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக்கொள்ளுமிடத்து அத்தகைய வான்படை வீரர் /வீராங்கணைகள் பொருட்டு அது காலவரையில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

எ. ஒரு வான்படை வீரர்/ வீராங்கணைகள் தமது பயிற்சியின் போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்காவது ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்தமற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப்படுமிடத்து அவர் பயிற்சியில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன் இதற்காக இலங்கை அரசின்சார்பில் வான்படை தளபதியுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படியும் தேவைப்படுத்தப்படுவர்.

ஏ. பெற்றோர் அல்லது பாதுகாவலர் உட்பந்திகள் ஊ, எ தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 32 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பிவைத்தல் வேண்டும். இத் தேர்வுநாடிகள் வான்படை வீரர்/வீராங்கணைகள் நியமிக்கப்படுவதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப் படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

ஐ. பந்தி 01, 02, 03, 04 மற்றும் 05 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வு நாடிகள் முதலாவது நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டுவதுடன் சித்தி பெறும் தேர்வு நாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதுடன் எல்லா விண்ணப்பதாரிகளும் இலங்கை வான்படையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச் சபைக்கு உட்படுத்தப்படுவர். கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வு நாடிகளின் எண்ணிக்கை அவரவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

ஒ. திருமணமாகாத வான்படை வீரர்/ வீராங்கணைகள் ஒருவர் வீரர்/ வீராங்கணைகள் விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத வான்படை வீரர்/வீராங்கணைகளின் உணவுப்படி உணவு விடுதிக்குச் செலுத்தப்டும்.

ஓ. திருமணமாகிய வான்படை வீரர் /வீராங்கணைகள் (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப்படும்.

ஔ. எல்லா வான்படை வீரர்/ வீராங்கணைகள் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

அஅ. எல்லா வான்படை வீரர் /வீராங்கணைகள் வான் படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

10. **தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்.-**

அ. நிரந்தர வான்படை வீரர் /நிரந்தர வீராங்கணைகள் தொடர்பாக

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 08 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளுமாறு கேட்கப்படுவார்கள். மேலும், 08 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 04 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது மீண்டும் அழைக்கப்படும் போது சமுகமளிக்க வேண்டும். 08 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

ஆ. பூமி தொழிற்பாட்டாளர்/மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர் /பரிபாலன கல்வி (முன்பள்ளி ஆசிரியர்) தெண்டர் வான்படை வீரர் /வீராங்கணைகள் தொடர்பாக

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொண்டர் வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 02 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். 02 ஆண்டுகள் கழிந்த பின் வான்படை தளபதியின் அனுமதியுடன் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

11. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.-** தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு நாடிகள் இலங்கை குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆகப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆகப்பெரும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

12. **சம்பளமும் கொடுப்பனவுகளும்.-**

அ. வருடத்திற்கான ஏற்புடையதாக அடிப்படை சம்பள வான்படை வீரர்/ நிரந்தர வீராங்கணைகள் விகிதங்கள் பின்வருமாறு :

| நிலை | அடிப்படை சம்பளம் | ஏனைய கொடுப்பனவுகள் | குறைக்கப்படாமல் முழுச்சம்பளம் |
|---|---|---|---|
| விமான வீரன் | 29,540.00 | 17,250.00+29,993.43 | 76,783.43 |
| முன்னணி விமான வீரன் | 30,440.00 | 17,250.00+29,993.43 | 77,683.43 |
| கோப்ரல் | 31,340.00 | 17,250.00+29,993.43 | 78,583.43 |

திருமணமாகி வெளியில் வசிக்கும் நபர்களுக்கு ரேசன் கொடுப்பனவு தோராயமாக ரூபா 30,000.00 மற்றும் பொருந்தக்கூடிய வாடகை உச்ச வரம்பு

ஆ. ஓய்வூதியங்கள்/ பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்கு காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின் படியாகும்.

13. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்.-**

அ. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2023, செத்தெம்பர் 30 ஆந் திகதி நண்பகள் 12.00 மணிக்கு முன் "தலைமை ஆட்சேர்ப்பு அதிகாரி, தலைமை ஆட்சேர்ப்பு அலுவலகம், இலங்கை விமானப்படை தொழிற்துறை பயிற்சி பாடசாலை ஏகல, கொட்டுகொட (CHIEF RECRUITING OFFICER, SRI LANKA AIR FORCE TRADE TRAINING SCHOOL, KOTUGODA.)'' என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் ''இலங்கை விமானப்படை

வான்படை நிரந்தர/தொண்டர் வீரர் /வீராங்கனைகளுக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களை www.airforce.lk/joinus/apply எனும் இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியும். ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு துறைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். வேறு வேறு துறைகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் பரிசிலிக்கப்படும். முடிவு திகதியின் பின்னர் கிடைக்கபெற்றதும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

ஆ. அரசாங்கசேவையில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில்/ குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பத்தாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/ சபையின்/ குடியியல்தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பங்களை www.airforce.lk/joinus/apply எனும் இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியும், இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க முடியாத விண்ணப்பதாரர்கள் பந்தி 13 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும்.

ஈ. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதி மற்றும் பிரதிகளை நேர்முக பரீட்சையின் போது சமரப்பித்தல் வேண்டும். மற்றும் நேர்முக பரீட்சையின் போது உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்பித்தல் வேண்டும்.

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப் பிரதி மற்றும் பிரதி (கல்விச்சட்டகோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது ).

(2) தேசிய ஆள் அடையாள அட்டை மூலப் பிரதி

(3) விண்ணப்பித்த துறைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ். மூலப் பிரதி

(4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில் / தொழில்நுட்பப்பயிற்சி அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனுமிருப்பின்) மூலப் பிரதி

(5) இரு குணநலச் சான்றிதழ்கள். (ஆறு மாதத்திற்கு உட்பட்ட) இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்விகற்ற பாடசாலை அதிபரினதும் மற்றயது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரரை அறிந்து உல்லவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்பவராயின் அப்போதைய தொழில்தருநரினதாக இருத்தல் வேண்டும்

(6) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள், மூலப் பிரதி

(7) ஆறு மாதத்திற்கு உட்பட்ட கிராம அலுவலர் சான்றிதல்

(8) பாடசாலை விடுகைப் பத்திரம்

(9) வெற்று பயில் கவர் மற்றும் பயில் டேக்

(10) வர்ண புகைப்படம் $2 \times 2\ 1/2$ அங்குல அளவு கிராம அலுவலரினால் சான்றிதல்படுத்தப்பட்டது.

உ. ஆவணங்களைக் காண்பிக்கும் படி வேண்டப்படும் போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வு நாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டா .

ஊ. ஆவணங்களோ ஆவணங்களின் மூலப்பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

எ. விண்ணப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

ஏ. விண்ணப்பத்தில் வயது, உயரம், நிறை மற்றும் அடிப்படை கல்வித் தகைமை எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, விண்ணப்பக்காரரைத் தகைமையற்றவராக்கும்.

14. மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் முதற்கட்ட தேர்வு இடம்பெறும். தேர்ந்தெடுக்கப்படும் தேர்வுநாடிகள் வான்படை தளபதியினால் விதித்துரைக்கப்பட கூடியவாறான சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்படி தேவைப்படுத்தப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம் நேரம் திகதி என்பன கடிதம் மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா.

15. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பத்தாரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணபபத்தாரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்.

16. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பத்தாரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

17. பொருத்தமான விண்ணப்பத்தாரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வு செய்யப்படுவர்.

18. விண்ணப்பக்காரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பத்தாரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தனித்தல் அத்தகைய விண்ணப்பத்தாரரை தகைமையிழக்கச் செய்யும்.

19. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பத்தாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

ஆர்ஏயூபி ராஜபக்ஷ,
RSP and two Bars, VSV, USP, MSc (MOA) USA,
MSc (Def Stu) in Mgt, MA in IS&S (UK),
BSc (Def Stu),
MIM (SL), AMIE (SL), rcds, psc
எயார் மார்ஷல்,
விமானப் படைதளபதி.

தலைமையலுவலகம்,
இலங்கை விமானப்படை,
த. பெ. எண் 594,
கொழும்பு 2.

| அலுவலக பாவனைக்கு |
|---|

**இலங்கை விமானப்படை**

**இலங்கை நிரந்தர /தொண்டர் விமானப் படையில்.......................... பிரிவில்**

**ஆண் /பெண் விமானப்படை வீரர்/வீராங்கனைகளுக்கான விண்ணப்பம்**

1. தேசிய இனம் : ..........................................................................................................................................
(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா? பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியையும் குறிப்பிடுக).

2. முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு):...................................................................................
.............................................................................................................................................................

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ..............................................................................................................

4. நிரந்தர முகவரி :...........................................................................................................................................

5. அஞ்சல் முகவரி :...........................................................................................................................................

6. பிறந்த திகதி :............................................................................................................................................................
(2024, சனவரி 01 ஆந் திகதியன்று ) (வருடங்கள்:............ மாதங்கள்:............ நாட்கள்:..............)

7. உயரம் : சென்றி மீட்டரில் .......................................................... ( அடி............அங்குலம்.....................)

8. மார்பு அளவு : அங்குலம் .....................

9. நிறை : கிலோ கிராம் .....................

10. நிரந்தர முகவரிக்கு அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :....................................................................................

11. நிரந்தர முகவரிக்கு அண்மையிலுள்ள வான்படை முகாம் :....................................................................................

12. மாவட்டம்: ............................................................................................................................................................

13. தேர்தற் தொகுதி :...................................................................................................................................................

14. கிராம அலுவலர் பிரிவு :.......................................................................................................................................

15. தொலைபேசி இலக்கம். :...................................................... WhatsApp இலக்கம்:-...........................................

E-mail முகவரி :..........................................................................

16. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா :...........................................................................

17. பால் : ஆண்/பெண் :...........................................................................

18. பாடசாலை பற்றிய விபரங்கள் :...............................................................................................................................

19. பாடசாலை அத்துடன் /அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை / சர்வகலாசாலை பெயர்கள் | பரீட்சை | ஆண்டு மற்றும் சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) | |
|---|---|---|---|---|
| | க.பொ.த. (சா/த) | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | க.பொ.த. (உ/த) | | | |
| | | | | |
| | | | | |
| | தொழில் தகைமைகள்<br>வேறு | | | |

20. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :

21. பாடசாலையிலிருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப்பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

22. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| முழுப்பெயர் | தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் | தொழில் | | தற்போதைய முகவரி |
|---|---|---|---|---|
| | | முன்பு | தற்போதைய | |
| தந்தை | | | | |
| தாய் | | | | |
| சகோதர /சகோதரிகள் | | | | |
| | | | | |
| | | | | |

23. நெருங்கிய உறவினர் யாரேனும் முன்பு அல்லது தற்போது வான் படையில் சேவையாற்றினால் அது பற்றிய விபரங்கள் :

| நிலை | பெயர் | பிரிவு /துறை | தற்போதைய விபரம் |
|---|---|---|---|
| | | | |

24. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் : (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

| தொடர் இல. | விபரம் | பாடசாலை | மாகாணம் | தேசிய | சர்வதேச |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

25. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :........................................................................................................................

26. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை : ..............................................................................................................

27. இலங்கை வான் படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிசில் சேர்வதற்கு முன்பு விண்ணபித்தாரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :.......................

28. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவரா? அல்லது பிணையில் விடப்பட்டவரா? அப்படியாயின் விபரங்கள் தருக : ..................................................................................................

29. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி /தேசிய வங்கி /பல்கலைக்கழகங்கள் /அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் : .....................................................

30. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

**31. விண்ணப்பதாரர் கைச்சாத்திட வேண்டிய வெளிப்படுத்துகை :**

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்களுக்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

. . . . . . . . . . . . . . . . . . . .                . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
திகதி                விண்ணப்பதாரரின் கையொப்பம்.

**32. விண்ணப்பதாரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை:**

அ. இலங்கை வான் படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 31 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . இவருக்கு நான் பெற்றோர் /பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொருப்பாளியாவேன் :

(1) பயிற்சியின் போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்தில் இலங்கை குடியரசினால் அக்காலம் வரை செலவிடப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கை குடியரசிற்கு திரும்பக் கொடுப்பதற்கும்.

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாடுக்கு காரணங்களுக்காக விண்ணப்பதாரர் தகுதிபெற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரைக்கான செலவுகள் யாவும் இலங்கை குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும்.

....................................................
பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்

திகதி : ........................................................................................................
பெயர் : (பெரிய எழுத்துக்களில்) ...................................................................
முகவரி : .....................................................................................................

...................................................
முதலாம் சாட்சியின் கையொப்பம்

திகதி : .........................................................................................................
பெயர் (பெரிய எழுத்துக்களில்) :...................................................................
முகவரி : ......................................................................................................

......................................................
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்

திகதி : ........................................................................................................
பெயர் (பெரிய எழுத்துக்களில்) :....................................................................
முகவரி : .....................................................................................................

08-1243/3

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விவசாயத் திணைக்களம் - மேல் மாகாண சபை

*ஹோமாகம (ஆண்கள்) மற்றும் வல்பிட (பெண்கள்) மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களில் ஒரு வருட தொழிற்கல்வி விவசாயப் பயிற்சி பாடநெறி மற்றும் இணைந்த "துறைசார் உதவியாளர் (விவசாய திட்டம்)" தேசிய தொழில் தகைமை (NVQ 4) பயிற்சி பாடநெறி - 2024*

மேலே குறிப்பிடப்பட்ட பாடநெறிக்காக மாணவ, மாணவிகளிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் மேல் மாகாண விவசாயப் பணிப்பாளரினால் கோரப்படுகின்றது. இப்பாடநெறியானது சிங்கள மொழி மூலம் நடைபெறும். அத்துடன் இது விவசாயப் பிரிவில் தொழில் வாய்ப்பு மற்றும் சுய தொழிலை அடிப்படையாகக் கொண்டு செயற்படுபவர்களை இலக்காகக் கொண்டது.

02. **பாடநெறியின் தன்மை.-**

- பாடநெறி பிரயோக மற்றும் எழுத்து மூலப் பயிற்சி ஒன்றாக நடாத்தப்படும். இந்தப் பாடநெறியை சிறப்பாகப் பூர்த்தி செய்யும் மாணவ, மாணவிகளுக்கு மேல் மாகாண விவசாயத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்கப்படும்.
- மேலும் மூன்றாம் நிலைக் கல்வி, மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் தேசிய தொழிற்பயிற்சி தகைமை (NVQ 4) சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்படும்.
- பாடநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடங்கள் பின்வருமாறு :

➢ (NVQ 4) க்கு உரிய பாடநெறிகள்

i. A-01S003M01 - விவசாயத்தின் அடிப்படைகள்
ii. A-01S003M02 - நெல் மற்றும் பிற பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல்
iii. A-01S003M03 - மற்றைய துறை ரீதியான பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல்
iv. A-01S003M04 - பூங்காப் பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல்
v. A-01S003M05 - அறுவடையும் மற்றும் ஆரம்ப நடைமுறைகளும்
vi. A-01S003M06 - பண்ணை இயந்திரங்கள் உபகரணங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு
vii. A-01S003M07 - விவசாய விரிவாக்கத் திட்டத்தை அமுல்படுத்தல்
viii. A-01S003BM01 - பணியிடத்திற்கான தொடர்பாடல் திறன்
ix. A-01S003BM02 - மொழி எழுத்தறிவு மற்றும் எண்ணியல்
x. A-01S003BM03 - குழு செயற்பாடு
xi. A-01S003BM04 - தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுதல்

❖ i-vi வரை மற்றும் viii-xi வரை மொடியூல் மற்றைய துறை ரீதியான உதவியாளர் (விவசாய) பாடநெறிக்குரிய மொடியூல்களாகும்.

➢ ஒரு வருட தொழில் விவசாய பயிற்சிப் பாடநெறிக்கு (VAT) உரியதாகும்.

கால்நடை வளர்ப்பு, நெற்செய்கை, மனைப் பொருளியல், தொழில் முயற்சி

- மேலே கூறப்பட்ட விடயங்களினூடாக பாடங்களை சமர்ப்பிக்கும் போது புதிய விவசாய தொழில்நுட்ப மேம்பாட்டுக்கு உரியதாக புதிய கண்டுபிடிப்புக்கள் (உதாரணம்: விளைச்சல் தொழில்நுட்பம், மும்முறை செய்கை முறை), சுயதொழில் உபாய மார்க்கங்கள் (உதாரணம் : நில அளவினை ஸ்தாபித்தல், பண்ணைக் கணக்கு, பண்ணை உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் உழவு இயந்திரத்தை செலுத்துவதற்கு பயிற்சி அழித்தல்) மற்றும் தகவல்களை தயாரித்தல், புதிய முறைகளுக்காக பயிற்சிகளை வழங்குதல் (உதாரணம்: கணினிப் பாவனை) மேற்கொள்ளப்படும். அவ்வாறே மாணவ, மாணவிகளின் ஆங்கில அறிவை மேம்படுத்த, மற்றும் தற்போதைய தேவையாகக் காணப்படும் விவசாயக் கொள்கை தொடர்பாக அறிவொன்றினைப் பெற்றுக்கொடுப்பதுமாகும்.
- இதற்கு மேலதிகமாக, முன்னைய தொகுதி மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசளிப்பு வழங்கும் விழா, சிங்கள புது வருட விழா மற்றும் வருடாந்த பிரித் ஓதுதல் போன்ற குழு நடவடிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படும்.

- ஒரு வருட காலத்தைக் கொண்ட பாடநெறியானது மூன்று தவணைகளைக் கொண்டது. இரண்டாவது தவணையின் இறுதியில் அதாவது மொடியுல் பயிற்சி பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் எழுத்து மற்றும் பிரயோக ரீதியான பரீட்சை நடைபெறும். மீண்டும் (மொடியூல்) கையேடு கால எல்லையினுள் தொடர்ச்சியாக மதிப்பீடு மேற்கொள்ளப்படும். முதலாவது மற்றும் இரண்டாவது தவணையினுள் கல்விச் சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது தவணையில் ஒவ்வொரு மாணவ, மாணவிகளும் தாம் தெரிவு செய்த விடய துறையினுள் வெளிவாரியான விவசாய இயக்கங்களுடன்/ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு கருத்திட்ட செயற்பாடொன்றினை மேற்கொள்ள வேண்டும். அவ்விடயம் பூர்த்தியானதும் எழுத்து மற்றும் பிரயோக ரீதியிலான பரீட்சை நடைபெறும். பாடநெறியில் கலந்து கொள்வது 85% ஆக இருந்து, தொடர்ச்சியான மதிப்பீட்டின் பின் மாணவ மாணவிகளுக்கு பாடநெறியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். அவ்வாறே இந்த மாணவ, மாணவிகளுக்காக மூன்றாம் நிலை கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் துறை சார்ந்த கள உதவியாளர் (விவசாயம்) (NVQ 4) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி தகைமைச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்படும்.

04. **ஆட்சேர்ப்பு விதி முறைகள்**:

04.1 **கல்வித் தகைமை**:

(i) கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் (சா./த.) சிங்கள மொழி (மொழி மற்றும் இலக்கியம்), கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்கலாக இரண்டு 02 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

04.2 **பிற தகைமைகள்** :

(i) எல்லா விண்ணப்பதாரிகளும் விண்ணப்பம் கோரப்படும் திகதியன்று 17 தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்;

(ii) விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருக்க வேண்டும்;

(iii) பிரயோக ரீதியிலான விவசாய செயற்பாடுகளில் ஈடுபட சிறந்த உடல் தேகாரோக்கியம் பெற்றவராக இருக்க வேண்டும். (இதனை உறுதிப்படுத்துவதற்காக அரச வைத்திய அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் ஒன்று பாடநெறியின் ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்) ;

(iv) தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மேல் மாகாண விவசாயப் பணிப்பாளரினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

(v) விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த நபர்கள் மற்றும் அதனை தொழில் ஒன்றாக கொண்டு செல்வதற்கு ஆயத்தமாக உள்ளவர்கள் தொடர்பாக விஷேட கவனம் ஒன்று செலுத்தப்படும்;

(vi) வசிக்கும் பிரதேசத்திற்குரிய கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழினால் உறுதிப்படுத்த வேண்டும்.

மேலும், கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மேல் மாகாணத்தில் வசிக்காத நபர் ஒருவர் பாடநெறியைக் கற்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்தால் அவருக்கும் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். எவ்வாறான போதும் விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்யும் போது மேல் மாகாணத்தில் வசிப்பவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். மேல் மாகாணத்தில் வசிப்பவர்களிடமிருந்து போதிய அளவு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படாதவிடத்து வெளி மாவட்டங்களின் விண்ணப்பதாரிகளை நேர்முகப்பரீட்சையின் மூலம் தெரிவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

05. **பாடநெறிக்குரிய ஊக்குவிப்புப் படி** :

(i) பயிற்சிக் காலத்தினுள், பயிற்சி நடவடிக்கைகளில் பங்கு பற்றும் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஐந்நூறு ரூபா (ரூபா 500.00) பயிற்சி நெறி ஊக்குவிப்பு படி செலுத்தப்படும்.

(ii) அது தவிர உணவுப் பானங்களுக்காக அல்லது வேறு எந்தப் படியும் வழங்கப்படமாட்டாது ;

(iii) பயிற்சி பெறும் காலத்தினுள் எல்லா மாணவருக்கும் கட்டணமின்றி விடுதி வசதி வழங்கப்படும்.

06. **பாடநெறியில் கலந்து கொள்ளும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் :**

(i) பயிற்சியாளர்களும் பயிற்சியின் முடிவில் திரும்ப செலுத்தப்படும் பாதுகாப்பு வைப்புத் தொகையாக ஆயிரம் ரூபா (ரூபா 1,000.00) வைப்புச் செய்யப்பட வேண்டும்;

(ii) பயிற்சியின் பின்னர் விவசாயத்தில் ஈடுபட அடிப்படை வசதிகள் சிறு அளவேனும் இருக்க வேண்டும். பயிற்சிக்குப் பதிவு செய்த பிறகு, அவர் கற்கை நெறியை விட்டு வெளியேற மாட்டார் என்று பொதுச் சேவையில் உள்ள ஒரு பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது இரண்டு பதவி நிலை உத்தியோகத்தர் அல்லாது அரசு அலுவலர்கள் கையெழுத்திட்ட பத்தாயிரம் ரூபா (ரூபா 10,000.00) உத்தரவாதப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(iii) பயிற்சியின் பின்னர் அரசாங்க சேவையில் வேலை ஒன்றை வழங்க, மேல் மாகாண சபையோ மத்திய அரசோடு உட்பட்டிருக்கவில்லை என்பது விஷேடமாக வலியுறுத்தப்படுகின்றது;

(iv) பயிற்சி பாடநெறி நடைபெறும் காலத்தினுள் தாபனத்தினால் பேணப்படும் பொதுச் சட்டதிட்டங்களுக்கு இணங்குவதாக எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்;

(v) பயிற்சிப் பாடநெறி நடைபெறும் காலத்தினுள் ஒழுக்கமின்மை மற்றும் சட்டதிட்டங்களுக்கு முரணாக செயற்பட்டால் அங்கத்துவத்தை இரத்துச் செய்வதற்கு அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

07. இங்கு கீழே காணப்படும் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 8 1/2 × 12 (A4) அங்குல அளவிலான கடதாசியில் இரண்டு பக்கங்களை உபயோகித்து 2023.10.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "மேல் மாகாண விவசாயப் பணிப்பாளர் (மேல் மாகாணம்), மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், 7 ஆவது மாடி, இலக்கம் 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது pdagriwp@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவம் அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "2024 ஆம் ஆண்டுக்கான ஒரு வருட தொழில் பயிற்சி விவசாயப் பாடநெறிக்கான விண்ணப்பப்படிவம்" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேலதிக தகவல்களை பெற https://agridept.wp.gov.lk வலைத்தளதிலிருந்து பெறவும்.

உங்கள் விண்ணப்பத்தை பதிவு தபால் மூலம் அனுப்பும் போது, விண்ணப்பப்படிவம் இடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2024 க்கான ஓராண்டு தொழில்சார் விவசாயப் பயிற்சி" என்று எழுதவும்.

(i) ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதி முடிவு மேல் மாகாண விவசாயப் பணிப்பாளருக்கு உரியதாகும்;

(ii) ஒழுங்கற்ற தவறான விண்ணப்பப் படிவங்கள் எந்தவொரு அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்;

(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :**

(i) தற்போது பாடசாலையில் இருந்து விலகிச் சென்றுள்ள மாணவ, மாணவிகள் ஆர்வம் காட்டுகின்றபடியால் நேர்முகப் பரீட்சையின் போது பாடசாலையை விட்டு விலகிச் சென்ற சான்றிதழ் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்;

(ii) தாம் கல்வி பயின்ற பாடசாலை மற்றும் பிரதேசத்தின் சமய தலைர் ஒருவரின் அல்லது நன்மதிப்பைப் பெற்ற அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு சான்றிதழ்கள், கல்வித் தகைமை (இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சையில் (சா/த) மற்றும் வேறு தகைமைகளுக்குரிய சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்;

(iii) தேசிய ஆள் அடையாள அட்டை ;

(iv) மேற் கூறப்பட்ட கல்விச் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பதிவு செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் :**

(iv) நடைமுறை விவசாயத்தில் ஈடுபடுவதற்கு, அவர் உடல் நலத்துடன் இருப்பதாகச் சான்றளிக்க, அரசு மருத்துவ அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ்.

எஸ். பி. ஏ. எம். ஏ. எம். குணவர்தன,
மாகாண விவசாயப் பணிப்பாளர்,
மேல் மாகாணம்.

மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் (மேல் மாகாணம்),
7 ஆவது மாடி,
இலக்கம் 204,
டென்சில கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
011-2092667,
2023, ஓகத்து 17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஹோமாகம (ஆண்) வல்பிட (பெண்) மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களில் ஒரு வருட தொழிற்பயிற்சி விவசாயப் பயிற்சி பாடநெறி மற்றும் இணைந்த “துறைசார் உதவியாளர் (விவசாய திட்டம்)” தேசிய தொழில் தகைமை (NVQ4) பயிற்சி பாடநெறி 2024 ஆம் வருடத்திற்காக மாணவர்களை இணைத்துக்கொள்ளுதல்**

விண்ணப்பதாரி பற்றிய தகவல்

1. முழுப்பெயர் (சிங்களத்தில்) :...........................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................

2. (i) முகவரி :...................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................
(ii) மாவட்டம் :...........................................................................................................
(iii) மாகாணம் : ..........................................................................................................................

3. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

4. முதலெழுத்துடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

5. கையடக்க தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

6. இல்லத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

7. பெண்/ஆண்: பெண் : ☐ ஆண் : ☐ (உரிய கூட்டினுள் ( ✓ ) அடையாளமிடுக)

8. பிறந்த வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

9. (i) தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

(ii) அடையாள ஆள் அட்டை வழங்கிய தாபனம் மற்றும் திகதி : ..................................

10. தாய்/தந்தை அல்லது பாதுகாவலர் பெயர் : ..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................

11. தாய்/தந்தை அல்லது பாதுகாவலர் முகவரி : ..............................................................................................................
..............................................................................................................
..............................................................................................................

12. தாய்/தந்தை அல்லது பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

13. அவசர சந்தர்ப்பத்தில் அறிவிக்கப்பட வேண்டிய நபர்கள் : பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் :

பெயர் : ..............................................................................................................

தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

14. கல்வித் தகைமை :

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சை :
முதலாம் அமர்வு : (.............................. வருடம்) பரீட்சை சுட்டெண் : (..........................................)

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சை :
இரண்டாம் அமர்வு : (.............................. வருடம்) பரீட்சை சுட்டெண் : (..........................................)

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(இ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர) பரீட்சை (............. வருடம்) பரீட்சைச் சுட்டெண் : (................)

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

15. பிற தகைமைகளும் வெளி ரீதியிலான செயற்பாடுகளும்

(i)

(ii)

(iii)

16. நீங்கள் உயர்கல்வி நிறுவனம் ஒன்றிலோ தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றிலோ/தாபனம் ஒன்றிலோ பாடநெறிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளீரா? அப்படியாயின் அது தொடர்பான விபரத்தைக் குறிப்பிடுங்கள் :

மேலே கூறப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். ஏதாவது தகவல் பொய்யானதென என்னைத் தெரிவு செய்த பின் வெளியாகினால் எந்தவொரு விசாரணையுமின்றி எனது பயிலுநர் நிலைமை இரத்தாகும் என்பதனையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

08-1118

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.